பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 16 ஞாயிற்றுக்கிழமை 30.04.2023 கதிர் 171

# வடக்கு ஆளுநராக ஜோன் அமரதுங்க

## 7ஆம் திகதி நியமனம்

(ந.லோகதயாளன்)
கொழும்பு, ஏப். 30

வடக்கு மாகாண ஆளுநராக ஜோன் அமரதுங்க மே 7 நியமிக்கப்படுவார் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய ஆளாநர் ஜீவன் தியாகராஜாவின் இடத்திற்கு ஐ.தே.கட்சியின் உறுப்பினரான ஜோன் அமரதுங்கா நியமிக்கப்படவுள்ளார்.

அரசுத் தலைவராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆளுநர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்போதைய ஆளுநர்கள் அனைவரும் கோட்டாபய ராஜபக்ஷ அரசுத் தலைவராக இருந்துபோது நியமனம் பெற்றவர்கள். எனினும் பதவியேற்ற கையோடு ரணில் ஆளுநர் மாற்றங்களைச் செய்யவில்லை.

2



## இது ரகசியம் அல்ல!

ஆளும் தரப்பு பன்னாட்டு செலாவணி நிதியத்துடன் (ஐஎம்எவ்) செய்துகொண்ட கடன் ஒப்பந்தத்துக்கான அனுமதி நாடாளுமன்றத்தால் வழுங்கப்பட்டுவிட்டது. இதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பை முக்கிய எதிர்க் கட்சிகள் புறக்கணித்த நிலையில் ஆளும் தரப்பு 120 வாக்குள் பெற்று ஒப்பந்தத்துக்கான அனுமதியை நாடாளுமன்றத்தில் பெற்றுக் கொண்டது.

இருந்தாலும் கிடைசி நேரம் வரையில் ஆளும் தரப்பு இந்த விடயத்தில் வெற்றி பெறுமா இல்லையா என்பது சஸ்பென்ஸாகவே இருந்தது. அதற்குக் காரணம் இந்த வாக்கெடுப்பில் ஆளும் தரப்புத் தோற்றால் அது இரண்டு விதங்களில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

2

## 2 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்கும், கேகாலை மாவட்டத்தில் கேகாலை பிரதேச செயலாளர் பிரிவுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளின் மலைகள், சரிவுகள் மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் இது தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் அறிவித்துள்ளது. (02)

## பெரும் படை பட்டாளத்துடன் லண்டன் செல்கிறார் ரணில்

(ந.லோகதயாளன்)

பிரித்தானியவில் மே 6 இடம்பெறும் புதிய அரசர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவிற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் செல்கிறார்.

மே 3 புறப்பும் அவர் மீண்டும் 7ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். லண்டன் செல்லும் அரசுத் தலைவருடன் தன்னுடன் ஏராளமான இராணுவ மற்றும் கடற்படை அதிகாரிகளையும் அழைத்துச் செல்லவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. எதற்காக அவர் இப்படி படை அதிகாரிகளை அழைத்துச் செல்லவுள்ளார் என்பது தெரிவிக்கப்படவிலல்லை.

## அரசுக்கு எதிராக அடைப்புப் போராட்டம் நடத்திய தமிழ்க் கட்சிகள் வாக்கெடுப்பில் ஏன் பதுங்கின?

### சாட்டையைச் சுழற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



அடைப்புக்கு எதிராகப் போராட்டம் நடத்தியவர்கள் ஏன் நாடாளுமன்றத்தில் சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான வாக்கெடுப்பில் ஓடி ஒளிந்தார்கள் என்று தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கூட்டணி ஆகியவற்றைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார் அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழரசுக்கட்சி உள்ளிட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளும்

2

## ஓஎம்பி அலுவலகம் வேண்டாம் முல்லைத்தீவில் போராட்டம்

### காணாமற்போனோரின் உறவுகளால் நடத்தப்பட்டது



(சண்முகம் தவசீலன்)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலக (ஓஎம்பி) செயற்ப்பாடுகளுக்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் சனிக்கிழமை போராட்டம் நடத்தினர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக காலை 10 மணியளவில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

போர்நிறைவடைந்தநாள் முதல் தமது உறவுகளுக்காக நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள் 2017 மார்ச் 8 முதல் முல்லைத் தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

இலங்கையில் தமக்கு எந்த நீதியும் கிடைக்காது எனவும் இலங்கை அரசின் காணாமல்போனோர் அலுவலகம் மட்டுமல் இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட பல ஆணைக்குழுக்களும் பயனற்றவைகள் எனவும் சர்வதேசநீதிப்பொறிமுறையே தமக்குத் தேவை எனவும் வடக்கு கிழக்கு எங்கும் ஆறு ஆண்டுகள் கடந்து ஏழாவது ஆண்டாக 150 க்கு மேற்பட்ட உறவுகளையும் இழந்து தொடர் போராட்டத்தை முன்னெடுத்து

2

## அமைச்சுப் பதவிகளை ஏற்கும் படி எதிர்க்கட்சியை அழைக்கவில்லை

### ஒத்துழைப்பு மட்டும் போதும் என்கிறார் சாகல



அமைச்சுப்பதவிகளை ஏற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு நாம் அழைப்பு விடுக்கவில்லை என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகலரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதையே எதிர்க்கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. அதனையே தற்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. சர்வதேசநாணய நிதியம் போன்ற ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும்போது, ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் வரை அதனை எம்மால் வெளிப்படுத்த முடியாது.

எந்தவொரு ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்ட பின்னரே அரசாங்கம் என்றரீதியில் எம்மால் அதனை நாட்டுக்கு வெளிப்படுத்த முடியும். எனினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக சர்வதேச நாயணநிதியத்துடனான பேச்சுக்கள் தொடர்பிலான விடயங்களை வெளிப்படுத்தி வந்தார்.

அச்சமயத்தில் வரி அதிகரிப்பு தொடர்பிலும் ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு தெளிவுபடுத்தியுள்ளார். அரசவருமானத்தை அதிகரிப்பதற்காக வரி அதிகரிக்கப்படுவது சாதாரண விடயமாகும். எனினும் தற்போது நாம் எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடிகள் காரணமாக வரியின்

2

## மகளைக் கொன்று விட்டு தன் உயிர் மாய்த்த தந்தை

### முன்னாள் சிப்பாய் எனத் தெரிவிப்பு

தனது இளம் வயது மகளை கத்தியால் வெட்டிக் கொலை செய்து விட்டு தந்தையொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மொனராகலை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த குடும்பஸ்தர், தனது 17 வயது மகளையே நேற்றுப்பகல் வீட்டில் வைத்து வெட்டிக் கொலை செய்தார்.

மகளின் காதல் விவகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த அவர், நேற்று மகளைக் கொலை செய்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலையைப் புரிந்த குடும்பஸ்தர், வீட்டுக்கு அருகிலுள்ள காணிக்குச் சென்று தூக்கிட்டு தற்கொலை செய்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் மேலும் தெரிவந்துள்ளது.

49 வயதான குறித்த குடும்பஸ்தர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும், அவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மகளின் காதலன் இராணுவத்தில் கடமையாற்றுகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

## 55 டெங்கு அபாய வலயங்கள் 15 மாவட்டங்களில் அறிவிப்பு

நாட்டின் 15 மாவட்டங்களுக்குட்பட்ட 55 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தளை, அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களே டெங்கு அபாய வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

அத்துடன், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், குருணாகலை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களும் டெங்கு அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேல் மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி, கடந்த 26 ஆம் திகதி முதல் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 2 ஆம் திகதி வரை இந்த விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன், மேல் மாகாணத்தில் இன்று முதல் வீடுகளைப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது, டெய்கு நோய் பரவும் வகையில் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 15 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், 29,000 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மேல் மாகாணத்திலேயே அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2500 பேரர் 4 மாதங்களில் எலிக் காய்ச்சலால் பீடிப்பு

வருடத்தின் தற்போதைய காலப்பகுதி வரையில் 2500 பேர் எலிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது

இது குறித்து அந்தப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது:

அதிக மழையுடனான வானிலையால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான ஆய்வுப் கற்கைநெறியை பூர்த்தி செய்பவர்களுக்கு நன்கு தெரியும்.

காலி, மாத்தறை மாவட்டங்களில் மாத்திரம் 19 பேர் எலிக்காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். இதுவரை 229 பேர் எலிக்காய்ச்சலுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முதலாவது ரணிலின் பொருளாதார மீட்சித் திட்டங் கள் அனைத்தும் பெரும் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டிருக்கும். இரண்டாவது ஏற்கனவே இந்த ஆட்சியை மக்களாணையற்ற ஆட்சி என்று எதிர்க் கட்சிகள் வறுத்தெடுத்து வரும் நிலையில் இந்த வாக்கெடுப்பில் தோற்று ஆளும் தரப்புக்குப் பெரும்பான்மை இல்லை என்று நிரூபணமானால் ஆளும் தரப்பின் நிலையைச் சொல்லவே தேவையில்லை.

இவற்றையெல்லாம் சிந்தித்து, மகிந்தவின் காலில் விழாத குறையாகத்தான் இந்த வாக்கெடுப்பில் ஆளும் தரப்பு வெற்றியைப் பெற்றுள்ளது. முன்னதாக இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது விடுவது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவெடுத்திருந்தார். அவருடன் சேர்ந்த பொது ஜன பெரமுனவைச் சேர்ந்த வேறு 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த முடிவிலேயே இருந்தனர்.

ரணிலும் நாணய நிதியமும் செய்து கொண்ட இந்த உடன்படிக்கை குறித்து தனக்கு நெருக்கமான பொருளாதார வல்லுநர்களிடம் மகிந்த ஆலோசனை கேட்டார். அவர்களும் ஒப்பந்தத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, அது நாட்டுக்கு நன்மையளிக்கக்கூடியதுதான், ஆனால் சில விடயங்களில் முழுமையாக உடன்படமுடியாது என்பதைச் சுட்டிக்காட்டினர். அதாவது ஒப்பந்தத்தில் உள்ள சில சரத்துக்களை ஏற்றுக்கொள்ளவே முடியாது, அவை நாட்டுக்குப் பாதகமானவை என்று அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர். அத்தோடு இந்த ஒப்பந்தத்தின் பின்னணியில் ஆளும்தரப்பு மேற்கொள்ளும் லாபத்தில் இயங்கும் அரச நிறுவனங்களையும் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இதனை அடுத்ததே மகிந்த வாக்களிப்பில் கலந்து கொள்வதில்லை என்று முடிவெடுத்தார். இந்த விடயத்தில் நாமலும் தீவிரமாக இருந்தார். ஒப்பந்தத்தை ஆதரித்து ராஜபக்ஷக்களின் எதிர்காலத்தைப் பாழடித்து விடக்கூடாது என்பதில் அவர் தீவிரமாக இருந்தார். ஒப்பந்தத்தை ஆதரித்து அதனால் தனது அரசியல் எதிர்காலத்துக்குப் பாரதூரமான விளைவுகள் வராமல் இருப்பதையும் உறுதிப்படுத்த விரும்பினார். இவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துத்தான் மகிந்த வாக்களிப்பில் கலந்து கொள்வதில்லை என்கிற முடிவை எடுத்தார்.

வாக்களிப்பு சமயத்தில் நாடாளுமன்றத்திற்கு வருவதில்லை என்பதுதான் மகிந்தவின் முடிவு. இந்த முடிவை அடுத்து வியாழக்கிழமை அவர் தனது உறவினர்களுடன் சேர்ந்து கண்டிக்குச் சென்றுவிட்டார். அங்கு தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டார். மகிந்த மட்டமல்ல இன்னும் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்படி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விட்டால் ஆளும் தரப்புக்குத் தேவையான 113 என்கிற பெரும்பான்மைப் பலம் கிட்டுவதே கூட துர்பலம் என்கிற நிலையே வெள்ளிக்கிழமை காலையில் காணப்பட்டது.

அதிர்ந்துபோன ஆளும் தரப்பு மேல்மட்டம், உடனடியாக பசில் ராஜபக்ஷவுடன் இது குறித்துப் பேசியது. அரசுத் தலைவரின் வழிகாட்டலில் நிலமை பசிலுக்கு விளங்கப்படுத்தப்பட்டது. ஆளும்தரப்புக்கு ஆதரவளிக்கக்கூடியவர்கள் யார் என்பதும் மகிந்தவும் 15 பேரும் வாக்களிக்காமல் விட்டால் ஒப்பந்தத்துக்கான அனுமதியைப் பெறமுடியாமல் ஆளும் தரப்புத் தோற்கக்கூடிய நிலமை தொடர்பில் விளக்கப்பட்டது. இதில் தோற்பது ஆளும் தரப்புக்கு மட்டுமல்ல ராஜபக்ஷக்களுக்குமே பேராபத்துத்தான் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

உடனடியாக பசில் கண்டியிலிருந்த மகிந்தவுக்கு அழைப்பெடுத்து நிலைமையை விளக்கினார். அவர் வாக்களிக்காவிட்டால் மற்றையவர்களையும் கட்டுப்படுத்துவது சிரமமம் என்றும் விளங்கப்படுத்தி மகிந்த நாடாளுமன்றத்திற்குச் செல்வதை உறுதிப்படுத்தினார். இதையடுத்து நகர்வுகள் விரைவுபடுத்தப்பட்டுமொட்டுக் கட்சியின் அந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும்கூட ஆதரவாக வாக்களிக்கும் நிலை ஏற்படுத்தப்பட்டது. மகிந்தவும் ஆதரவாக வாக்களிப்பார் என்கிற உறுதிமொழி தஇதையடுத்து கண்டியிலிருந்து கொழும்புக்கு விரைந்த மகிந்த வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களித்தார். ஆனால் நாமல் வாக்களிக்காமல் ஒதுங்கி விட்டார்.

வாக்களிப்பு நேரம் வந்த போது நாமல் சபா மண்டபத்திற்கு வெளியே இருந்தார். தந்தையையும் அந்தத் தருணத்தில் வெளியே வருமாறு அவருக்கு தொலைபேசி மூலம் குறுந்தகவல் ஒன்றையும் அவசரமாக அனுப்பினார். ஆனாலும் நிலமைகளின் விபரீதத்தைப் புரிந்து கொண்ட மகிந்த, வாக்களிப்பில் கலந்துகொண்டு ஆதரவாக வாக்களித்தார். அதன் மூலம் ஆளும் தரப்பு 120 வாக்குகளைப் பெற்றது.

- இடிமின்னல் -

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அடுத்தடுத்த ஆண்டுகளில் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் தற்போது ஆளுநர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. அதனடிப்படையில் கிழக்கு மாகாணத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான செந்தில் தொண்டமானை நியமிக்க நகர்வுகள் இடம்பெற்று வரும் நிலையில், வடக்கிலும் ஆளுநரை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வட மாகாண ஆளுநர் பதவியைப் பெறப் பலரும் முயற்சித்து வந்த நிலையில் நன்கு தமிழ் தெரிந்த சிங்கள இனத்தவரான ஜோன் அமரதுங்க நியமிக்கப்படவுள்ளார் என்று காலைக்கதிர் அறிந்தது..

இன்று பிரித்தானியா புறப்பட்டுச் செல்லும் ஜனாதிபதி வெசாக் தினத்திற்கு முதல் நாள் நாடு திரும்பியதும் ஆளுநர் நியமனப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழ் மக்களுக்கு அப்பட்டமான பொய் முகங்களை காட்டிவருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை இதனைத் தெரிவித்தார். அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பாக சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சித் தலைவர்களும் இந்திய உயர்ஆணையரைச் சந்தித்துக் கலந்துரையாடியமை தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களிடமிருந்து வாக்குகளை பெறுவதற்காக 13ஆம் திருத்தம் தமிழ் மக்களின் தீர்வு அல்ல எனத் தெரிவிப்பார்கள். ஆனால் இந்தியா அமெரிக்கா, அரசுகளிடமும் சிங்கள முற்போக்குவாதிகளிடமும் 13வது திருத்தத்தையே வலியுறுத்துவார்கள். இதுதான் இவர்களின் இரட்டை முகம்.

ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தமே தீர்வு என்று அறிவித்தபோது எதற்காக இந்தத் தமிழ்க் கட்சிகள் அவருடன் பேச்சுக்குச் சென்றன? ரணிலுக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அங்கீகாரத்தை ஏற்படுத்துவதற்காக செய்யப்பட்ட ஏமாற்று வேலை.

அண்மையில் இந்த ஆட்சிக்கு எதிராக முழு அடைப்புப் போராட்டம் நடத்தினார்கள். ஆனால் அதற்கு அழைப்பு விடுத்த தமிழ் தரப்புக்கள் அனைத்தும் நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஓடி ஒளிந்து விட்டன. அதன் மூலம் அரசுக்கு ஆதரவு வழங்கியிருக்கின்றன - எனன்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இந்த முழு அடைப்புப் போராட்டத்தால் தமிழ் மக்களுக்கு 100 கோடி ரூபா ஒரே நாளில் இழப்பு ஏற்பட்டது மட்டும்தான் கிடைத்த பயன் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடினார்.

## அமைச்சுப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சதவீதத்தை அதிகரிக்க வேண்டியேற்பட்டுள்ளது.

எனவே எதிர்க்கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் நோக்கத்திற்காக மாத்திரம் செயற்படுவதா அல்லது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதா என்று சிந்திக்க வேண்டும். இதற்கான பகிரங்க அழைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த ஆண்டு ஜூலை 25ஆம் திகதி முதன்முதலாக விடுக்கப்பட்டது. அதன் பின்னர் பலர் சந்தர்ப்பங்களில் அவர் அந்த அழைப்பினை வெளிப்படுத்தியுள்ளார். அவர் எதிர்க்கட்சிகளிடத்தில் அமைச்சுப்பதவிகளை ஏற்குமாறு கூறவில்லை. மாறான வேறு பல வழிகளி லும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பினை வழங்க முடியும். அந்த ஒத்துழைப்பையே கோருகின்றோம் என்றார்.

## ஒஎம்பி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வருகின்றனர்

இந்நிலையில் இலங்கை ஆளும் தரப்பு காணாமல் போனோர் அலுவலகம் ஊடக இவர்களது சர்வதேச நீதி விசாரணை கோரிக்கையை முடக்கும் முகமாக பல நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் தமது உறவுகளை அச்சுறுத்தி விவரங்களைப் பதிய முற்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சுமத்தியிருந்தனர் இந்த மிரட்டல்களைக் கண்டித்தே சனிக்கிழமை போராட்டம் நடத்தப்பட்டது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் சனிக்கிழமை அதற்குரிய அலுவலகத்தால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருநந்தது. இதையடுத்து விசாரணைகள் சனிக்கிழமை இடம்பெறாது என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு அலுவலகம் தெரிவித்திருந்தது.

இதற்கு மத்தியிலேயே முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக திரண்ட காணாமல்போனோரின் உறவினர்கள் ஒஎம்பி அலு வலக செயற்பாடுகள் தமக்கு தேவையில்லை என வலியுறுத்தி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# அரச பொது ஊழியர் சங்க மேனதினம் வவுனியாவில்

## வருகின்றன பல தீர்மானங்கள்

(அகீல்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் 30ஆவது ஆண்டு மே தினக் கூட்டமும், வருடாந்தப் பொதுக் கூட்டம் முதல் தடவையாக வடமாகாணத்தில் இடம் பெறவிருக்கின்றது.

கல்முனையில் தலைமைச் செயலகத்தைக் கொண்டு இயங்கிவரும் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், தமது வடமாகாணத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், முக்கியஸ்தர்களின் நீண்டகால கோரிக்கையின் பிரகாரம் இம்முறை சங்க மே தினக் கூட்டத்தையும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தையும் வடக்கில் நடத்துவதற்கு முன் வந்துள்ளதாக சங்கத்தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வவுனியா நகர மண்டபத்தில் சங்கத்தின் 30ஆவது மேதினக் கூட்டமும் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மேதினக் கூட்டத்திலும், வருடாநதப் பொதுக் கூட்டத்திலும் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருச்செல்வம் தினேஸ்குமார் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

அத்துடன் வவுனியா நகர சபைச் செயலாளர் திருமதி. வி.நிஸங்க கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்வார்.

மேலும் வவுனியாவில் நடைபெறவிருக்கும் மேற்படி மே தினக்கூட்டம் மற்றும் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை சங்கத்தின் வடமாகாண இணைத்தலைவர் ஏ.புண்ணிய மூர்த்தி, வட மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான இணைப்பாளர் ஆர்.சூரிய குமார் ஆகியோர் இணைந்து செய்து வருகின்றனர்.

இதேவேளை குறித்த மே தினக் கூட்த்தின் தீர்மானங்களாக பின்வரும் முக்கிய தீர்மானங்களாக நிறைவேற்றப்படவுள்ளதாகவும் தலைவர் லோகநாதன் கல்முனையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தீர்மானங்கள் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக வடக்கும், கிழக்கும் இணைந்த மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.

சகல அரசாங்க ஊழியர்களுக்கும் தற்போதைய வாழ்க்கைச் செலவு, பொருளாதார பிரச்சினைகளைக் கருதி 25 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

சகல ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கும் 15 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும்.

வடகிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் பேசும் புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

மக்கள் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து அரசு கொண்டுவர விருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

அரச சேவையில் தற்காலிக மற்றும் சமயா, சமய அடிப்படையில் கடமையாற்றும் ஊழயிர்களை நிரந்தரமாக்குவதற்கான புதிய அரச நிருவாக சுற்று நிருபம் வெளியிடப்பட வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டி சுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கும், கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவுக்கும் தனிப் பிரதேச சபைகள் உருவாக்கப்பட வேண்டும்.

225 வருடங்கள் பழமை வாய்ந்த கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலையாகத் தரமுயர்த்த வேண்டும்.

33 வருடங்களாக செயற்பட்டுவரும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை



முழுமையான பிரதேச செயலகமாகத்தர முயர்த்தி வர்த்தமானி வெளியிடப்பட வேண்டும்.

வடகிழக்கில் பலதரப்பட்ட இன்னல்களுக்கு மத்தியில், உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றிவரும் பணியாளர்களின் கோரிக்கைளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

இந்த தீர்மானங்களை சங்கத்தின் மே தினத்தீர்மானங்களாகப் பிரகடனப்படுத்துவதற்கு சங்க உயர்பீடக் கூட்த்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தலைவர் லோகநாதன் குறிப்பிட்டார்.










# பெருந் தோட்டத் தொழிலாளர்களின் ஈபிஎவ், ஈரிஎவ் இற்குப் பாதிப்புவரும்!

## கபீர் ஹசீம் எச்சரிக்கை



தேசிய கடன்களை மறுசீரமைத்தால் தோட்ட தொழிலாளர்களின்ஊழியர்சேமலாப நிதியம் ,ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கும் பாதிப்பு ஏற்படும்.

வெளிநாட்டுமுதலீட்டாளர்களுக்கு வரி சலுகை வழங்கி விட்டு, நாட்டு மக்களை வரி அதிகரிப்பால் மேன்மேலும் நெருக்கடிக்குள்ளாக்குவது எந்த விதத்தில் நியாயமாகும்.

கண்ணை கட்டிக் கொண்டுஅரசாங்கம்சர்வதேச நாணயநிதியத்தைநாடியதால் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. சமூக கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிபந்தனைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்றசர்வதேசநாணய நிதியத்தின் மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்தை தேசதுரோக செயற்பாடாகக் குறிப்பிட்டதரப்பினர் தற்போது நாணய நிதியத்தை புகழ்பாடுவதுவியப்புக்குரியது.

உலகில் ஏழு நாடுகளை தவிர ஏனைய நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பாண்மையைபெற்றுக் கொண்டுள்ளன.

நிதி நெருக்கடி, பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு நிதியுதவி வழங்கி,நெருக்கடிநிலையில் இருந்து மீண்டெழுவது நாணய நிதியத்தின் பிரதான கொள்கையாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் மேற்குலக பொருளாதார கொள்கையை அடியொற்றியதாக காணப்படும்.

முன்வைக்கப்படும்நிபந்தனைகளை சமூக கட்டமைப்பு பொருத்தப்பாட்டுக்கு அமைய தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்று நாட்டை முன்னேற்றமடைய செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கே உண்டே தவிர நாணய நிதியத்துக்குக் கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின்ஒத்துழைப்பைபெற்று முன்னேற்றடைந்தநாடுகளும் உள்ளன,தோல்வியடைந்த நாடுகளும் உள்ளன.மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் உலக நாடுகள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது உலக நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்த போது மலேசியா மாத்திரம்நாணய நிதியத்தை நாடாமல் தேசிய மட்டத்தில் கொள்கைவகுப்புக்குஅமைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அவதானம் செலுத்தியது.மலேசியாவின் முன்னாள் பிரதமர் மகதீர் மொஹமட் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் கொள்கைத் திட்டத்தை முன்வைத்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்று சிங்கப்பூர், தாய்வான், துனிசியா, இந்தியா ஆகிய நாடுகள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்தன.மறுபுறம் தன்சானியா, கிரீஸ் மற்றும் ஆஜன்டீனா ஆகிய நாடுகள் இன்றும் பொருளாதார ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. ஆஜன்டீனாவில் இன்றும் பணவீக்கம் நூற்றுக்கு நூறு சதவீதமாக காணப்படுகிறது.

இலங்கை 16 தடவைகள் சர்வதேசதடவைகள் நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளது.16 தடவைகளில் ஒன்பது தடவைகள் மாத்திரம் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் முழுமையாக செயற்படுத்தப்பட்டன.2008 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 2008 ஆம் ஆண்டு 2.6 பில்லியன் டொலர் நிதியுதவியை பெற்றுக்கொண்டது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அரசமுறைவெளிநாட்டுகடன்களில் எவ்வித வெளிப்படை தன்மையும் கிடையாது. 1948 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை அரசமுறை கடன் 1786 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

2004ஆம்ஆண்டுமுதல் 2014ஆம்ஆண்டுவரையான காலப்பகுதியில் அரசமுறை கடன்வீதம் 500 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்ட போதும் நாடு முன்னேற்றமடையவில்லை.

2004ஆம்ஆண்டுமுதல் 2014 ஆம் ஆண்டு வரை பொருளாதார படுகொலையாளிகளாக செயற்பட்டவர்கள் 2019 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுசென்றார்கள். பொருளாதார படுகொலையாளிகள் தான் நாட்டை இன்றும் ஆட்சி செய்கிறார்கள்.

ஜனாதிபதி பதவியில் மாத்திரம் தான் மாற்றம் ஏற்பட்டுள்ளது.நாட்டைவங்குரோத்து நிலைக்குதள்ளியவர்களுடன் இணைந்துஎவ்வாறுசெயற்பட முடியும்.

வங்குரோத்து நிலை அமைந்துள்ளபின்னணியில் சர்வதேசநாணயநிதியத்தை தவிர்த்துமாற்றுத்திட்டம்ஏதும் கிடையாது. இருப்பினும் ஒரு சிலநிபந்தனைகள்தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வரி சலுகை வழங்குவதை நிறுத்த வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் பிரதான நிபந்தனை முன்வைத்துள்ளது. இந்த நிபந்தனை தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வரி சலுகை வழங்கியமை தற்போதைய பொருளாதார பாதிப்புக்கு ஒரு காரணியாக உள்ளது. இராணுவ தலைமையகத்துக்கு சொந்தமான காணி சங்கிரில்லா குழுமத்துக்கு 40 ஆண்டு காலத்துக்கு வழங்கபட்ட்டது. வரி சலுகையுடன் வழங்கப்பட்டதால் அரசாங்கத்திற்கு ஒரு சதம் கூட வருமானம் கிடைப்பதில்லை.

கொழும்பு துறைமுகத்தில் ஜோன் கீல்ஸ் நிறுவனத்துக்கு எஸ்.எ.ஜே.எ முனையம் 30 ஆண்டு காலத்துக்குவரிசலுகையுடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் வருடாந்தம் 40 மில்லியன் டொலர் வருமானம் பெறுகிறது.

ஆனால்அரசாங்கத்துக்கு வருமானமில்லை.முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தின் தெற்கு முனையத்தை சீனாவுக்கு வழங்கினார்கள்.20 வருடகாலத்துக்கு வரிசலுகை வழங்கப்பட்டதால் சீன நிறுவனம் வருடாந்தம் 50 மில்லியன் டொலர் இலாபம் பெறுகிறது.அரசாங்கத்துக்கு ஒரு சதம்கூடவரிகிடைப்பதில்லை.

மறுபுறம் மேற்கு முனையம் இந்தியாவின் அதானி குழுமத்துக்கு 20 ஆண்டுகால வரி சலுகையுடன் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்துக்கு வரிவருமானம் கிடைக்காது. கொழும்பு துறைமுகத்தில் 14 ஆயிரம் ஏக்கர் காணி சீன நிறுவனத்துக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் பல மில்லியன் வரி வருமானத்தை அரசாங்கம் இழக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தை நாங்கள் தேசதுரோக செயற்பாடாக கருதவில்லை. முன்னாள்நிதியமைச்சர்பஷில் ராஜபக்ஷவின்முறையற்றநிதி முகாமைத்துவத்தால் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள போகிறது.ஆகவே வங்குரோத்து நிலையடைய முன்னர் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லுமாறு 2020 ஆம் ஆண்டு முதல் அரசாங்கத்திடம் பலமுறை வலியுறுத்தினோம்.வங்குரோத்து அடைய முன்னர் நாணய நிதியத்தை நாடியிருந்தால் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்காது.வங்குரோத்து நிலை அடைந்ததன் பின்னர் நாடியதால் கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை ஒரே கட்டமாக செயற்படுத்தும் போது நடுத்தரமக்கள்மோசமாகபாதிக்கப்படுவார்கள்.சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான வரி வீதம் பன்னிரெண்டு சதவீதத்தால் அதிகரிக்கப்படடுள்ளது. உழைக்கும் வரி வீதம் 36 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வரி சலுகைவழங்கிவிட்டு,தேசிய தொழிற்துறையினருக்கு கடுமையாக வரி அறவிடுவது எவ்விதத்தில் நியாயமாகும்.

தேசிய கடன்களை மறுசீரமைக்க போவதில்லை என அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் தேசிய கடனை மறுசீரமைப்பதற்கான திட்டத்தை மத்திய வங்கியின் ஆளுநர் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளார். தேசிய கடன் பெறுமானம் ட்ரில்லியன் ரூபாவாக காணப்படுகிறது.பிணைமுறி பத்திரங்கள் ஊடாக 3.7 ட்ரில்லியன்,பிணைமுறிகள்ஊடாக 8.5ட்ரில்லியன்கடன்காணப்படுகிறது.

ஊழியர்சேமலாபநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்ஆகியவற்றில்இருந்து மாத்திரம் அரசாங்கத்துக்கு 42 சதவீத அளவு கடன் வழங்கப்பட்டுள்ளது.தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் போது வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும்.இதனால் பெருந்தோட்ட மக்களின் ஊழியர் சேமலாப நிதியம்,ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு பாதிப்பு ஏற்படும்.

வெளிநாட்டு அரசமுறை கடன்களை ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மறுசீரமைக்க தீர்மானித்துவிட்டு, தேசிய கடன்களை எதிர்வரும் மாதம் மறுசீரமைக்க உத்தேசித்துள்ளமை எவ்விதத்தில் நியாயமாகும். ஆகவே அரசாங்கம் கண்களையும்,கைகளையும்கட்டிக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தைநாடியதால்கடுமையான நிபந்தனைகளை ஏற்க வேண்டியுள்ளது. ஆகவே ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் மீண்டும் மறுசீரமைக்கப்பட வேண்டும். - என்றார்.

வாழ்த்துகின்றோம்

கலாநிதி கே. எம். பஞ்சாபிகேஷன் நாகேந்திரன்



தென்மராட்சிப்பதிக்கு புகழ் ஈந்த நாதஸ்வரக் கலைஞர் கலாநிதி கே. எம். பஞ்சாபிகேஷன் அவர்களின் புத்திரன் நாகேந்திரன் அவர்களுக்கு கனடா நாட்டில் Richmond Gabriel University காபிரியல் பல்கலைக்கழகம் 15.04.2023 அன்று கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையையிட்டு தென்மராட்சி மக்கள் வாழ்த்தி வணங்குவதோடு மேன்மேலும் பல சிறப்பு பட்டங்கள் பெற்று எமது மண்ணிற்கு புகழ்பெற்று தர இறையருளை வேண்டி நிற்கின்றோம்.

அனுசரணையாளர்கள்

வதனா டிஸ்பென்சரி
பஸ்நிலையம், சாவகச்சேரி

திருக்கணிதப் பதிப்பகம்
டச்சுவீதி, சாவகச்சேரி

கதிர் வெல்டிங் வேக்ஸ்
டச்சுவீதி, சாவகச்சேரி

குகன் ஸ்ரூடியோ
கண்டி வீதி, சாவகச்சேரி

அம்பிகா டிஸ்பென்சரி
கண்டி வீதி, சாவகச்சேரி

ஸ்ரார் ஹோட்டல்
கண்டி வீதி, சாவகச்சேரி

இந்திரன் ஜீவல்லறி
நியூமார்க்கட், சாவகச்சேரி

## மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்கு எரிபொருள் திட்டம் குறித்து சீனா விளக்கம்

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் எரிபொருள் விநியோக மற்றும் விற்பனை செயற்பாடுகள் வெற்றியளித்தால் , மசகு எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் இவ்வாண்டுக்குள் 120 - 140 மில்லியன் டொலர் முதலீட்டை மேற்கொள்ள முடியும் என்றும் சீனா குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஜெங்ஹொங்,அஸ்கிரியபீடமகாநாயக்கவரகாகொட ஸ்ரீஞானரத்ன தேரர் மற்றும் மல்வத்து பீட மகாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கல தேரர் ஆகியோருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேரர்களுக்கு மேலும் தெளிவுபடுத்தியுள்ள சீனத் தூதுவர் -

கடந்த வாரம் சீனாவின் சினொபெக் நிறுவனத்தின்தலைவர்இலங்கைக்குவிஜயம் செய்திருந்தார். அவரால் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகளின் அடிப்படையில் விரைவில் , சீன எரிபொருளைக் கொண்ட 150 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இந்த வேலைத்திட்டம் வெற்றியளித்தால் , நாளாந்தம் 4 மெற்றின் தொன் மசகு எண்ணெண் சுத்தீகரிப்பினை நாட்டில் முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றால், இவ்வாண்டுக்குள் 120 - 140 மில்லியன் டொலர் முதலீடுகளை மேற்கொள்ள முடியும்.

நாம் அறிந்த வகையில் இலங்கை ஒரே யொரு எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையம் மாத்திரமே காணப்படுகிறது. அது 1960ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாகும். அதன் இயந்திரங்களும் மிகப் பழைமை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

எனவே புதிய எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையமொன்றை இலங்கை ஸ்தாபிக்க முடிந்தால் அது இலங்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம். இதனை அமைப்பதன் ஊடாக நூற்றுக் கணக்கான வேலைவாய்ப்புக்களும் உருவாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வரலாற்றுக்கான புதிய முகத்தின் அவசியம்

வரலாறு தொடர்பிலான புதிய நிறுவனம் ஒன்று தொடங்கப்படும் என்று அரசுத் தலைவர் ரணில் விக் கீற்றரரமசசீங்க தெரிவித்திருக்கிறார். இலங்கையில் இனங்களிடையே பகைமையும் பிளவுகளும் அதிகரித்ததற்கும் மோதல்கள் உருவாகியதற்கும் 30 வருட கால உள்நாட்டு ஆயுதப் போர் இடம்பெற்றதற்கும் இலங்கையர்களுக்கு முறையானதும் சரியானதுமான வரலாறு கற்பிக்கப்படாததும் வரலாற்றை எப்படி அணுகுவது என்கிற பார்வை மாணவப் பருவத்தில் இருந்து உருவாக்கப்படாததுமே காரணங்கள் என்றால் அதனை மறுக்க முடியாது. இந்த நிலையில் வரலாறு தொடர்பில் புதிய நிறுவனம் தொடங்குவது குறித்த அரசுத் தலைவரின் கருத்து கவனத்துக்குரியது. அதுவும் தனது இந்தப் பதவிக் காலத்திற்குள் அந்த நிறுவனத்தை உருவாக்கப் போவதாக அவர் தெரிவித்திருக்கிறார் என்பது மேலும் கவனத்திற்குரியது.

மகாவலி கேந்திர நிலையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற றோயல் ஆசியாசார் சங்கத்தின் 178 ஆவது ஆண்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“நான் முதலில் செய்ய விரும்புவது வரலாற்றுக்கான ஒரு கல்வி நிறுவனத்தைத் தொடங்குவதுதான். எனது பதவிக்காலம் முடிவதற்குள் இது குறித்து கலந்துரையாடி முடிவு எடுக்க வேண்டும். அதற்காக பல்கலைக்கழகங்கள், தொல்பொருள் திணைக்களம் மற்றும் றோயல் ஆசியாசார் சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாடவேண்டிய இறுதி வரைவை நாங்கள் தயாரித்து வருகிறோம். எதிர்காலத்தில் இந்தத் துறையின் பணிகளுக்கு நிதி மற்றும் அரச ஆதரவை நாங்கள் இந்த வரலாற்று நிறுவனம் மூலம் வழங்குவோம்.

பலர் வரலாறு கற்பதில்லை. இப்போது வரலாறு வேறுபட்டது. வெவ்வேறு பதிப்புகள் உள்ளன. வரலாறு தமக்கான போக்கில் சென்றிருப்பது எல்லாவற்றையும் விட மோசமானது. எனவே நாம் அவர்களை மீண்டும் சரியான பாதையில் கொண்டு வந்து வரலாற்றுக்கு முன்னுரிமை வழங்கி செயல்படுத்தவேண்டும்.

புதிய நிறுவனம் தேசிய அருங்காட்சியகம், தேசிய ஆவணக் காப்பகம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் கலாசார முக்கோணம், பல்கலைக்கழகங்கள் மற்றும் றோயல் ஆசிய சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும். இந்த அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு மையத்தின் மூலம் நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பு மூலம் இந்த துறை தொடர்பான அறிவை மேலும் செழுமைப்படுத்த முடியும் என்று நான் நம்புகிறேன்.

இலங்கையின் வரலாறு பற்றி மாத்திரமல்ல. அதன் பண்பாட்டின் மீதும் கவனம்செலுத்தவேண்டும். வரலாறு மற்றும் கலாசாரத்தை எவ்வாறு ஆய்வு செய்வது? அந்த விடயங்களுடன் தொடர்புடைய கடந்த காலம் எங்குள்ளது என்பதை இங்கு கண்டறிய முடியும். இறுதியாக, இந்த துணைக்கண்டத்தின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு பிரச்சினையான தகவலையும் ஆராய்ந்து தீர்க்கும் ஆற்றலை இந்தப் புதிய நிறுவனம் கொண்டிருக்கவேண்டும்”

இலங்கையின் வரலாறு மகாவம்சம் என்கிற ஒரு பௌத்த பிக்குவால் எழுதப்பட்ட நூலின் வழியேதான் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்த நூல் ஒரு வரலாற்று ஆய்வு நூலல்ல என்றபோதும் அதனை அடிநாதமாகக் கொண்டே இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்று நிறுவ முயல்கிறார்கள். பௌத்த எச்சங்களைக் காணும் இடமெல்லாம் சிங்களவர்களின் அடையாளம் என்று நிறுவப் பார்க்கிறார்கள். மகாவம்சம் கூறும் கதைக்கு முன்னும் இலங்கைக்கு மனித வரலாறு உண்டு என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் உண்டு. எனவே நேர்மையான, உண்மையான, தொழிவாண்மை நிறைந்த ஆய்வுகள் செய்யப்படுவது அவசியம். புதிய நிறுவனம் அதனை நோக்கியதாக அமைந்தால் சிறப்பானது.

இலங்கையின் மிகப் பெரிய சிக்கல், எத்தனை நல்ல விடயத்தையும் மிக மோசமாக நடைமுறைப்படுத்துவது. அரசியல் தலைமைத்துவம்தான் அதற்குக் காரணம். உதாரணமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தம் இதுவரையில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையே எடுத்துக்கொள்ளலாம். இதுபோன்று பல விடயங்களும் நல்லவைகளாக இருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எனவே புதிய நிறுவனமும் அந்த வகைக்குள் இல்லாதிருப்பது மிக முக்கியம். அதன் நோக்கமும் போக்கும் தெளிவாக இருக்கவேண்டும். தொழில்வாண்மை நிறைந்தவர்களால், சிங்கள இனவாதத்தால் சூழப்படாதவர்களால் கையாளப்படுவதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அது பயனுள்ளதாக இருக்கும். இல்லையேல் மீண்டும் இலங்கை என்பது பௌத்த சிங்கள வரலாறு என்பதாகவே மக்கள் ஏமாற்றப்படுவார்கள்.

# சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பின்றி நாட்டை கட்டியெழுப்புவது மிகக் கடினம்!

## மைத்திரிபால சிறிசேன இடித்துரைப்பு



கொழும்பு, ஏப். 30

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பின்றி நாட்டைக் கட்டியெழுப்புவது மிகக் கடினமாகும். நான் நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தால் நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கு ஆதரவாக வாக்களித்திருப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனிப்பட்டகாரணங்களுக்காக பொலன்னறுவையில் தங்கியிருக்க வேண்டியேற்பட்டமையின் காரணமாகவே வாக்களிப்பில் கலந்துகொள்ள முடியவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், இதனை சில ஊடகங்கள் தவறாகச் சித்திரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலன்னறுவையில் இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

வறுமை நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியமாகும். எனவே நாணய நிதியத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறும் தரப்பினர் ஆட்சியைப் பொறுப்பேற்றால் மாத்திரமே அதனை உணர முடியும். நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்றியிருக்கின்றேன். எனவே, அதன் ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை நான் நன்கு உணர்ந்திருக்கின்றேன்.

இம்முறை நாணய நிதியத் துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்திலும் சிறந்த பல விடயங்கள் உள்ளன. அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்று எண்ணுபவர்களே இதற்கு எதிராகக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

2018 ஆம் ஆண்டு காணப்பட்ட நிலைமைக்கேனும் நாட்டைக் கொண்டு வர வேண்டும் என்பதே தற்போதைய அரசாங்கத்தின் முயற்சியாகக் காணப்படுகிறது. தனிப்பட்ட தேவைகளுக்காக பொலன்னறுவையில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறன்றி நான் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டிருந்தால் நாணய நிதியத்தின் ஏற்பாடுகளுக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பேன்.

ஆனால் சில ஊடகங்கள் இதனைத் தவறாகச் சித்திரித்து செய்திகளை வெளியிடுகின்றன. அத்தோடு இதில் காணப்படும் சில கடுமையான நிபந்தனைகளை நாணய நிதியத்துடன் பேச்சுதகளை முன்னெடுத்து நீக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். எனது ஆட்சி காலத்திலும் இவ்வாறான நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் நாணய நிதியப் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை முன்னெடுத்து அவற்றை நீக்கிக் கொள்ள என்னால் முடிந்தது. - என்றார்.

# நாட்டின் ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றவேண்டும்!

## போக்குவரத்து அமைச்சர் பந்துல கோரிக்கை

கொழும்பு, ஏப். 30

ரயில் சேவை திணைக்களமாக காணப்படும் பின்னணியில் நடைமுறைக்கு சாத்தியமான மாற்றங்களை ஏற்படுத்துவதில் சிக்கல் காணப்படுகிறது.

ஆகவே, ரயில் திணைக் களத்தை அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கான சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் வாய்மூலவிடைக்கான வினாக்கள் வேளையின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அமைச்சர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

மூன்று பொதி விநியோக ரயில் சேவை, எட்டு எரிபொருள் விநியோக சேவை, 40 பயணிகள் ரயில் சேவை ஆகியவற்றின் ஊடாகப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன.

கொழும்பு கோட்டை - அநுராதபுரம், கொலன்னாவ - அநுராதபுரம், கொலன்னாவ - மட்டக்களப்பு, கொலன்னாவ - கட்டுநாயக்க விமான நிலையம், கொலன்னாவ - காலி ஆகிய பகுதிகளுக்கு ரயில்கள் ஊடாக எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றன.

ரயில்கள் ஊடாக மொத்தசந்தைக்கு அல்லது பிரதான நிலை சந்தைகளுக்கு மரகறிகளை விநியோகம் செய்ய 2022 ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டத்தில் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்புகள் கிடைப்பனவு, நிதி நெருக்கடி ஆகிய காரணிகளால் இந்த செயற்திட்டத்தை முன்னெடுக்க முடியவில்லை.

புகையிரத என்ஜின்கள், புகையிரத பெட்டிகள் பல ஆண்டுகாலமாக இறக்குமதி செய்யப்படவில்லை.

50 ஆண்டுகளாக பாவனை செய்த புகையிரத என்ஜின்கள் தற்போதும் பயன்படுத்தப்படுகின்றன.

நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புகையிரத பெட்டிகள், புகையிரத என்ஜின் மற்றும் புகையிரத பாதைகள் திருத்தம் செய்யப்



படாததால் புகையிரத சேவை கட்டமைப்பில் பாரிய பிரச்சினைகள் தோற்றம் பெற்றுள்ளன.

புகையிரத சேவையில் நிலவும் பதவி வெற்றிடங்கள், சேவை கட்டமைப்பில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண எந்த திட்டமும் புதிதாக வகுக்கப்படவில்லை.

நிதி நெருக்கடிக்கு மத்தியில் புதிய நியமனங்களை வழங்க முடியாது. ரயில்வே சேவையில் இருந்து ஓய்வு பெற்ற சாரதிகள், சேவை ஒழுங்குப்படுத்தாளர்கள் உட்பட புகையிரத சேவை கட்டமைப்பின் சேவையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

ரயில் சேவையில் வருமானத்தை காட்டிலும், செலவு பன்மடங்காக காணப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு ரயில் சேவையின் வருமானம் 2.9 பில்லியன் ரூபாவாக காணப்பட்ட நிலையில் ரயில் சேவையாளர்களுக்கு 2.3 பில்லியன் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒட்டுமொத்த சேவையாளர்களுக்கும் சம்பளம் வழங்க 7 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ரயில் சேவை திணைக்களமாக காணப்படும் பின்னணியில் நடைமுறைக்கு சாத்தியமான மாற்றங்களை ஏற்படுத்துவதில் சிக்கல் காணப்படுகிறது.

ஆகவே புகையிரத திணைக்களத்தை, அதிகார சபையாக மாற்றியமைக்க வேண்டும். அதற்கான சட்ட திருத்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன். - என்றார்.

# இந்தியா வழங்கிய உதவிகள் தமிழர்களுக்கு கிடைக்கவில்லை

## அகதிகளாக சென்றவர்கள் கண்ணீர் பேட்டி



இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் 7 பேர் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளனர் அவர்கள் இந்தியா வழங்கிய நிவாரண உதவிகள் இதுவரை தமிழர்களுக்கு கிடைக்கவில்லை என்று .தெரிவித்துள்ளனர்

தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்கரை அருகே இரண்டாம் மணல் தீடையில் பைபர் படகில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த. ஏழு இலங்கைத் தமிழர்கள் தஞ்சம் அடைந்தனர்.

இந்நிலையில் மீனவர்கள் கொடுத்த தகவலின் பேரில், கடற்படை ஐபோலிஸார் மற்றும் இந்திய கடலோரக் காவல் படையினர் கூட்டாக அவர்களை மீட்டு மண்டபம் அழைத்துசென்றனர். அவர்களிடம் போலீஸார் விசாரணை செய்யும்பொழுது இலங்கையில் இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டு எங்கே பார்த்தாலும் புத்த மதக் கோயில்களை கட்டி மதவாதம் பெருகிவிட்டது. - என்றனர்.

மேலும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை காப்பாற்ற பல நாடுகளில் இருந்தும் குறிப்பாக இந்தியாவில் இருந்தும் வழங்கப்பட்ட எந்த நிவாரண உதவியும் தமிழர்கள் பகுதியில் முழுமையாக வந்து சேரவில்லை. இன்றளவும் இலங்கையில் பொருளாதார நெருக்கடி நீடித்துக் கொண்டே இருப்பதாகவும் பொருளாதார மீட்புக்கு எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இலங்கை அரசாங்கம் இன்று வரை எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தனர்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குப் பின் அங்கிருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 244 ஆக உயர்ந்துள்ளது.

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
24 . 04 . 1947

விண்ணில்
28 . 04 . 2023



## இரத்தினம் தவராசா

(கொம்மந்தறை)

கொம்மந்தறை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தவராசா அவர்கள் 28.04.2023 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் அன்னம்மா தம்பதியினரின் இளைய மகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், மகாலிங்கம், நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் திலீபன், கேசவன், தீபா, கேமா ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரிதாஸன், செந்தில்குமரன், றோஜனா, ராஜ்குமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜலோன், வரோதயன், கஜானா, சபினாஷ், சஷ்திகா, கௌசிகன், கௌதமன், கௌசல்யன், கௌரீசன், கரீஸ்மன், தக்ஷயன் ஆகியோரின்  அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.04.2023 ஞாயிற்றுக்கிழமை இன்று முற்பகல் 10 மணியளவில் கொம்மந்தறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொம்மந்தறை
வல்வெட்டித்துறை

தகவல்
குடும்பத்தினர்
077 607 0680
076 546 7631

## கனிமங்களுடன் கூடிய திரவங்களை அதிகளவில் பருகுமாறு கோரிக்கை!

நாட்டில் தற்போதைய வெப்பமான காலநிலை காரணமாக நீரிழப்பை தடுக்க போதிய கனிமங்களுடன் கூடிய திரவங்களை அதிகளவில் பருகுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் ஆலோசகரும் குழந்தை மருத்துவ நிபுணருமான தீபால் பெரேரா இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

நெற்செய்கை, வீதி அமைத்தல், பாடசாலை மாணவர்கள் விளையாட்டு மைதானங்களில் விளையாடுதல், படைகளால் நடத்தப்படும் பயிற்சி அமர்வுகள், விளையாட்டுப் போட்டிகள்,

புத்தாண்டு விளையாட்டு அமைப்பாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்கள் நிகழ்வு போன்றவற்றில் மக்கள் ஈடுபடும் போது அதிகளவு நீரை பருக வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், குழந்தைகளுக்கும் அதிகளவில் தண்ணீர் வழங்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போதுமான திரவங்கள் மற்றும் தாதுக்களை எடுத்துக்கொள்ளத் தவறினால் சோர்வு, தலைவலி, அயர்வு, வாந்தி, உடல் வலி, தூக்கமின்மை, அதிகரித்த தூக்கம் மற்றும் பசியின்மை போன்ற முக்கியமான உடல்நலச் சிக்கல்களுக்கு வழிவகுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை கடும் வெப்பம் நிலவுகிறது. இந்தக் காலகட்டத்தில் மக்கள் போதுமான ஓய்வு எடுக்க வேண்டும். மக்கள் இயற்கையான திரவங்களான தேங்காய் தண்ணீர் மற்றும் ஆரஞ்சு சிறிதளவு உப்பு கலந்து அருந்துவது தாகத்தை தணிக்கும் திரவங்களாகும். இது உடலை நீரேற்றமாகவும் வைத்திருக்க உதவுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள், குறிப்பாக குழந்தைகள் தேவையில்லாமல் சுட்டெரிக்கும் வெயிலில் செல்ல வேண்டாமென்றும் இது கடுமையான உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்துமென்றும் இது வெப்ப பக்கவாதத்துக்கு வழிவகுக்கும் எனவும் அவர் மேலும் எச்சரித்துள்ளார்.

## இலங்கையின் மூத்த கலைஞர் கே.சந்திரசேகரன் காலமானார்!



இலங்கையின் மூத்த வானொலி, தொலைக்காட்சி, மேடை நாடகக் கலைஞர் கலாபூணம் கே.சந்திரசேகரன் மதுரையில் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று (சனிக் கிழமை) காலமானார்.

அன்னார் நீண்ட காலமாக இலங்கைத் தமிழ் நாடகத்துறைக்கு அளப்பரிய பங்களிப்பு செய்தவர்.

அவரது மறைவிற்கு இலங்கையின் மூத்த கலைஞர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# பொருளாதாரப் பாதிப்புகளுக்கு தீர்வுகாண அரசியலுக்கு அப்பாற்பட்டு இணையுங்கள்!

### பிரதமர் தினேஸ் அழைப்பு

கொழும்பு, ஏப். 30

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பவும், இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகலரும் அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பல்வேறு காரணிகளால் நாடு என்ற ரீதியில் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளோம். அதனால் முழு நாடும் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

இதை மக்கள் மறக்கவில்லை. பொருளாதாரப் பாதிப்பில் காரணமாக ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் முழுமையாக பதவி விலகியது. பொருளாதாரப் பாதிப்பு பாரிய ஆட்சி மாற்றத்தை குறுகிய காலத்துக்குள் ஏற்படுத்தியது. அதன்படி கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் நெருக்கடிகளை குறைக்க சர்வதேச ரீதியில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனூடாக தற்போது நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு முடியுமாக உள்ளது. இந்த விடயத்தில் அனைவரின் ஒத்துழைப்புகளும் அவசியமாகும்.

தற்போது அந்நிய செலவாணி அதிகரித்து செல்வதுடன் நாட்டின் ரூபாவின் பெறுமதியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவற்றுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை பலமாக அமையும்.

இந்த உடன்படிக்கை மற்றும் புதிய முதலீடுகள் ஊடாக எமது நட்பு நாடுகளுடன் இருதரப்பு உடன்படிக்கைகளுக்கு செல்ல முடியுமாக இருக்கும்.

பொருளாதார ஸ்திரத்தன்மை மீண்டும் ஏற்படுத்தப்பட்டு வீழ்ச்சியடைந்திருந்த நிறுவனங்களை மீண்டும் முன்னேற்ற முடியுமாக அமைகின்றது.

கடந்த காலங்களில் நிறுத்தப்பட்டிருந்த வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க முடியுமாக இருக்கும். பொருளாதார பாதிப்பு அனைத்து தரப்பினருக்கும் தாக்கம் செலுத்தியுள்ளது.

நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அரசியல் நோக்கத்துக்கு அப்பாற்பட்ட வகையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். - என்றார்.






OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

The inEVitable
Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

இந்தியாவில் அதி வேகமாக விற்பனையாகும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்

3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

Page I | English for all | Sunday the 30th of April 2023



**We welcome students' articles in word for publication**

-Editor-

kalaikkathiredu@gmail.com


***Read the following passage and Answer: the question that follows.***

# The Tiger



There are five different kinds of tigers alive in the world today. They are the Siberian tiger, South Chinese tiger, Indo Endangered Chinese tiger, Bengal tiger and Sumatran Animal Facts tiger. Unlike lions, tigers prefer to live alone, except for mothers who live with cubs. They are the biggest cats in the world. The best known tigers are found in India and are called 'The Royal Bengal Tigers!

Wild tigers eat as much as 40 pounds of meat at one time. After that they do not eat for several days. A full grown tiger weighs about 230 kgs. and may be 10ft. long including its 3ft. long tail. They can run only short distances. They can run upto a speed of 35 miles per hour. Cheetahs run much faster because their bodies are slim and weightless. But a tiger's body is heavy so they cannot run so fast.

Tigers hunt at night. They do not run after their prey but sneak up to their prey and then attack it. They are excellent swimmers.

Tigers are declared to be an endangered species. This is a result of poaching and a loss of habitat of tigers.

*A. On the basis of your reading of the above passage, complete the following table.*

1. Life style - Live alone, except mothers who live with cubs.
2. Appetite - a. ________________
3. Weight and Length - b. ________________
4. Speed of running - c. ________________
5. Hunting Habits
   d. (i) sneak upto prey and attack
   (ii) ______________________________
6. Tigers found in India called (e) ______________

*B. Taking information from the passage, complete the following statements as briefly as possible.*

1. Two differences between the Tigers and Cheetahs are :
(i) Cheetahs run faster than tigers.
(ii) ___________________________

*2. Poaching of tigers and a loss of their habitat have resulted in the tigers becoming*

_________________________________________

*3. 'The Royal Bengal Tiger' found in India is known to be*

_________________________________________

# New Friend

Calliope is my new friend. She is 6 and just moved to our town from Sioux Falls, South Dakota. I have never been to South Dakota. I grew up in Rhode Island. Calliope said that she lived on a farm and had cows




and pigs. I only have a dog. I'd love to have a pig! Calliope has 4 brothers, but I am an only child. She also likes country music, but I prefer to listen to Top 40. We are pretty different

After knowing Calliope for a few weeks, though, I realized that we are a lot alike, too. We both like to read. I have seventeen Barbie dolls, and Calliope has 15! We like to share Barbie clothes. I have a collection of shells I found at the beaches here in Rhode Island and Calliope has a bunch of rocks she collected in the hills of South Dakota. Some even have fossils in them! I think Calliope

Answer these questions about the text.

1. Who are the main characters?
-------------------------------------------------
2. Where had Calliope lived?
-------------------------------------------------
3. How were the two friends different?
-------------------------------------------------
4. How were the two friends alike?
-------------------------------------------------




# Rabindranath Tagore

Rabindranath Tagore, the Bengali poet, is one of the greatest writers of India. He was born in a rich, Bengali family in Calcutta. His father's name was Devendranath Tagore.

Tagore was interested in writing stories and poems since his childhood. As an adult he wrote many novels, plays, poems and short stories. He received the Nobel Prize for his book Gitanjali, which is a collection of poems.

Rabindranath Tagore founded a school called 'Shanti. Niketan' and a university called "Vishwabharathi". He has GITANJALI created our national anthem. His song 'Golden Bengalis the national anthem of Bangladesh.

A. On the basis of your understanding of the above passage, complete the table given below that gives us information about Rabindranath Tagore. Write your answers in the spaces provided.

**RABINDRANATH TAGORE**

1. Father's Name a. ______________________
2. Family Details b. ______________________
3. Prize awarded c. ______________________
4. Founder of d. ___________________________
e. Created the national anthem of e. ________

B. Complete the following statements by filling in the blanks with one word only.

1. Tagore was born in
-------------------------------------------------------------
2. Tagore's book, which is a collection of poems, is called
-------------------------------------------------------------
3. He liked to write poems and stories since his
-------------------------------------------------------------

**"konwledge isn't free. You have to pay attention"**

# How Ukraine has become the crucible of the new world order



Russia's invasion of Ukraine has been described by politicians and commentators as a watershed moment in modern history, a turning point comparable in importance to the 9/11 attacks in the US in 2001, the fall of the Berlin Wall in 1989, and even the assassination of John F Kennedy in 1963.

Whether this portentous view of the war turns out to be justified, only time – and future historians – will tell. But there's no doubt that in the violent, tumultuous days after 24 February, the established international order has been shaken and, in some respects, upended in extraordinary, unexpected and often unwelcome ways.

Ukraine – a country at the crossroads of Europe and Asia that is little known and often ignored – has become overnight the crucible of a new world order, a catalyst and trigger for radical upheaval. It has produced a new geopolitical alphabet, spelling out a much-altered future.

A - Atomic weapons Vladimir Putin's ill-disguised threat to go nuclear should the west intervene to halt the invasion has come scarily close to breaking a post-1945 taboo. It has undoubtedly inhibited the US and British response, with fears expressed about a "third world war". A dangerous precedent has been set.

B - Joe Biden

The conflict in Ukraine may be the undoing of US president Joe Biden. Photograph: Yuri Gripas/EPA

Joe Biden's tenure as US president may be fatally undermined by the war. He is praised for avoiding direct military confrontation with Russia. But as in Afghanistan last year, he has failed to prevent a humanitarian disaster – or stop Putin. Anger over resulting domestic energy price rises and retail inflation could be his undoing.

C - China stands to be the big strategic winner if, as seems likely, Ukraine becomes a protracted trial of strength between Russia and the west. Its president, Xi Jinping, appears to have given Putin a green light when they met just before the invasion. Now he's backing peace efforts. China's economy has been hurt by rising commodity costs. But it's a small price to pay for increased global dominance.

Russian President Vladimir Putin (L) and Chinese President Xi Jinping

Vladimir Putin and Xi Jinping. Photograph: Alexei Druzhinin/ Sputnik/ AFP/Getty

D - Disinformation used as a weapon of war, particularly in the form of "false flag" operations, invented social media "facts", and internet bots, has come of age in the Ukraine conflict. When coupled with cyber warfare, propaganda, media manipulation and rigid censorship, as in Russia, it's a potent means of sowing doubt, division and defeatism.

E - Recep Tayyip Erdoğan, Turkey's unpopular authoritarian president and serial invader of Syria and Iraq, is one of several unlikely would-be peacemakers. Erdoğan has bought missiles from Russia, sold drones to Ukraine, and his country belongs to Nato. Perhaps that's why no one trusts him. High-level talks last week in Turkey were a Russian time-wasting exercise. But by hosting them, Erdoğan hopes for a boost before difficult elections next year.

F - France's Emmanuel Macron appears to have added critical impetus to his presidential re-election bid next month through his dogged efforts to keep Putin engaged in some sort of dialogue. In contrast, far-right hopefuls Marine Le Pen and Eric Zemmour have been forced to defend their Russian ties.

French President Emmanuel Macron and German Chancellor Olaf Scholz

French president Emmanuel Macron, left, and German chancellor Olaf Scholz before the European council meeting in Versailles, 10 March 2022. Photograph: Xinhua/Rex/Shutterstock

G - Germany's chancellor, Olaf Scholz shocked friends and enemies alike shortly after the invasion by suspending the highly prized Nord Stream 2 gas pipeline from Russia and creating an £85bn fund to boost the country's armed forces. For the first time since the Nazi era, Germany has begun to re-arm – and Europe cheered. Extraordinary.

H - Stalks of wheat

Wheat exports from Ukraine and Russia could be cut off. Photograph: Philippe Huguen/AFP/Getty

Hunger, and consequent political unrest, affecting poorer countries in the Middle East, Africa and Asia is a growing fear as Ukraine's and Russia's wheat, grain and vegetable oil exports are cut off. In Tunisia, symbolic birthplace of the Arab spring revolts, bread prices recently hit an unsustainable 14-year high.

I - Israel has disappointed its friends with its invasion fence-sitting, ostensibly justified by a need to keep on terms with Russia in Syria. But its rightwing government will be happy if the war scuppers the west's proposed revived nuclear deal with Iran, to which the ever devious Putin has suddenly raised fresh objections.

J - Boris Johnson, Britain's prime minister, was on the ropes and almost out for the count in the days before the invasion, vilified for illegal Downing Street partying in breach of Covid lockdown rules. But the war, allowing him to play international statesman, has provided a new lease of political life – for now.

Boris Johnson and Defence Secretary Ben Wallace visit the Cammel Laird shipyard on March 10, 2022 in Liverpool

Boris Johnson and defence secretary Ben Wallace visit the Cammel Laird shipyard in Liverpool on 10 March. Photograph: WPA/Getty

K - Kaliningrad, the Russian enclave squeezed between Poland and Lithuania, and the three (former Soviet) Baltic republics are emerging as possible next flashpoints. Fabricated fears about the safety of ethnic Russians in Estonia, for example, have been used in the past to justify Putin's threats, just like in Ukraine. Now they are being whipped up again.

L - International law has taken a battering from which it may not recover. By its actions, Russia has torn up the UN charter. Yet the UN security council is powerless to act in the face of Moscow's permanent veto power – which it used to block a resolution condemning the invasion. Russia also boycotted a hearing on Ukraine at the UN's highest court, the international court of justice in The Hague. UN reform must come soon.

M - Emmanuel Macron's oft-mocked vision of a sovereign Europe that enjoys "strategic autonomy" and its



own military and security capabilities independent of the US has been boosted by the war. Rattled EU leaders meeting at last week's Versailles summit agreed Europe urgently needed to be better able to defend itself.

N - Nato has emerged united and stronger, so far, and there is talk of Finland and Sweden joining (though not Ukraine). But the 30-country, US-led alliance is facing criticism for not doing more to help Kyiv. And the war has revived debate over whether Nato's eastward enlargement after the Soviet collapse was a blunder that contributed to the current crisis.

A worker walking past a pump jack on an oil field

The reliance on Russian oil is a weakness for the west, particularly Europe. Photograph: Sergei Karpukhin/Reuters

O - Oil and gas are fatal chinks in western armour when confronting Russia. The US and Britain decided last week to ban all oil imports by year's end. The heavily dependent EU needs more time. But rocketing prices, hitting businesses and consumers, have dramatised how hugely powerful a weapon energy is for Putin. A race to find badly needed "green" and nuclear alternatives has begun.

P - Playing and watching international sport has got a lot harder – if you are Russian. The country's athletes, footballers, and racing drivers are among sportspeople banned from European and world competitions. Boycotts have a cultural aspect, too, involving ballet, theatre, orchestras and even cat lovers. Such unprecedented "virtue signalling" may backfire, by convincing ordinary Russians that they, not just their government, are being targeted.

Anna Tikhomirova (Micelle de Poitiers) and Artem Ovcharenko (Antoine Mistral) in The Flames Of Paris by The Bolshoi Ballet

The Bolshoi Ballet performs The Flames Of Paris at the Royal Opera House in London. Photograph: Tristram Kenton/The Guardian

Q - The quest for truth – the fundamental purpose of free, independent media – has been further set back by the war. Russia has long persecuted western correspondents. Now it is threatening them with prison if they report openly on the invasion. Facebook and Twitter have been blocked. The EU, in turn, has banned Russian state-backed RT and Sputnik, deeming them mere propaganda outlets. The concept of the freedom of the press is under siege.

R - refugees Flee To Slovakia Amid Russia's Attack On Ukraine

Children fleeing Ukraine are given blankets by Slovakian rescue workers, 9 March 2022. Photograph: Christopher Furlong/Getty

Record refugee outflows, and an accompanying humanitarian crisis, may overwhelm the ability of EU governments and relief agencies to cope. More than 2 million Ukrainians have fled so far, from a population of 44 million. Europe opened its borders amid an epic outpouring of public support. But the EU's longstanding lack of an agreed, collective refugee policy, and Britain's shamefully mean-spirited response, suggest trouble ahead as the numbers grow.

S - Sanctions on Russia are the most sweeping and punitive ever imposed. Banks, including Russia's central bank, businesses and oligarchs have been hit hard. The rouble has plunged. Numerous western brands and companies such as Shell have pulled out. So far Putin has shrugged it off, but this looks like a bluff. If Russia defaults, or retaliates by cutting gas supplies to Europe, the result may be an all-round economic meltdown, big job losses, and a drastic fall in living standards in the UK and elsewhere.

T - Taiwan has been watching events in Ukraine with deep unease. The US refusal to come to Kyiv's aid with direct military support is especially chilling, given the invasion threat the island faces from Beijing. As with Ukraine, Washington has no legal or treaty obligation to fight for Taiwan. Its position is deliberately ambiguous – and inherently unreliable. China is watching, too.

U - The United Arab Emirates is among several western allies in the Middle East and Asia that have failed to show hoped-for solidarity. The UAE has not condemned the invasion, nor has it adopted sanctions against Russia, with which it has close financial ties. Mealy mouthed Narendra Modi's India, the "world's largest democracy", is another big disappointment, as is Egypt. These derelictions will not be forgotten, and may affect future ties.

V - Venezuela's hard-left government has been in America's bad books for years. But when US officials visited recently to discuss resumed oil supplies in return for an easing of sanctions, they found a receptive audience. In contrast, when Joe Biden phoned the Saudi crown prince, Mohammed bin Salman (a keen Putin fan), requesting increased oil production to compensate for banned Russian exports, he refused to take the president's call. US-Saudi relations have been in the toilet since Jamal Khashoggi's 2018 murder. This incident will make matters worse.

An injured pregnant woman is stretchered out of a maternity hospital

An injured pregnant woman is stretchered out of a maternity hospital shelled by Russian forces in Mariupol, Ukraine, 9 March 2022. Photograph: Evgeniy Maloletka/AP

W - War crimes investigators face a big test as evidence mounts of multiple atrocities by Russian forces – exemplified by last week's Mariupol maternity hospital bombing. "Universal jurisdiction" prosecutions are contemplated in national courts. And the international criminal court has begun investigations. But like the US and China, Russia does not recognise the ICC's authority. This situation must change if war crimes are to be justly punished, now and in the future.

X - Xinjiang, home to China's persecuted Uyghur Muslim minority, is one of many global troublespots whose urgent problems have been eclipsed by Ukraine. Millions of Afghans enduring a winter of hunger and fear under Taliban rule suddenly seem forgotten. The plight of civilians caught up in Ethiopia's civil war is another glaring blindspot.

Ukrainian president Volodymyr Zelenskiy

Ukrainian president Volodymyr Zelenskiy has inspired courage and resilience in his people. Photograph: Laurent Van Der Stockt/Getty

Y - Younger generations the world over have reason to wonder what's going on. First they inherited the climate crisis, then came the pandemic, and then the resultant bans on study and travel. Now they face something older generations said would never happen again: a full-scale war in Europe.

Z - "Z" is a fascist-style pro-war motif displayed by Russian invasion forces and rightwing Putin supporters. But the "Z" that will be remembered with admiration around the world belongs to the name of Volodymyr Zelenskiy Ukraine's comedian president turned inspirational war leader, who embodies the fight for freedom.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி30.04.2023இல் வெளியிடப்பெற்றது.

# நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 04

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 16 சனிக்கிழமை 29.04.2023 கதிர் 43


## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

### நீர்கொழும்பில் நேற்றிரவு கொடூரம்

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, மட்டக்குளியைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான சுப்பிரமணியம் சபாரத்தினம் (வயது 51) என்பவரே

2

## கட்டான சபையின் முன்னாள் உப தவிசாளர் படுகொலை

கட்டான பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பீட்டர் ஹப்பு ஆராச்சி மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது சடலம் வண்ணாத்தவில்லு பிரதேசத்தில் உள்ள அவரது தென்னந்தோப்புக் காவல் வீட்டில் மீட்கப்பட்டுள்ளது என்று வண்ணாத்தவில்லுப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் இன்று காலை வண்ணாத்தவில்லுப் பிரதேசத் தில் உள்ள தனது காணிக்குத் தேங்காய் பறிப்பதற்காகச் சென்றுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான பீட்டர் ஹப்பு ஆராச்சி இறக்கும் போது 76 வயதாகும்.

மேலும் அவர் முன்னாள் அதிபரும் ஆவார்.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (02)

# அடிக்கடி மஹிந்தவின் வீட்டில் சீனத் தூதுவர்

## பின்னணி என்ன?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தீவிர அரசியல் செயற்பாட்டைத் தொடங்கியதுதான்தாமதம் அவரது வீட்டுக்கு அடிக்கடி பல முக்கிய பிரமுகர்கள் வந்து போகின்றார்கள்.

அவர்களுள் முக்கியமான வெளிநாட்டுத் தூதுவர் ஒருவரும் அடங்குகின்றார். அவர்தான் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங்.

அவர் இப்போதெல்லாம் அடிக்கடி மஹிந்தவின் விஜேராம வீட்டுக்குச் சென்று மஹிந்தவுடன் நீண்ட நேரம் பேசிவிட்டுப் போகின்றார்.

சீனா என்றாலே ஊடகங்கள் விழிப்படைவது வழமைதானே. அப்படித்தான் இந்த விடயத்திலும் ஊடகங் கள் விழிப் படைந்துள்ளன.

மஹிந்தவை மீண்டும் பிரதமராக்குவதில் சீனா மும்முர மாகச் செயற்பட்டு வருகின்றது என அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)



## குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை!



அம்பாந்தோட்டையில் குடும்பஸ்தர் ஒருவர் இன்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

37 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வெளியில் இருந்து வந்த நபர் ஒருவர் வீட்டில் இருந்த குறித்த நபரை ஜன்னல் வழியாகத் துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (02)

## மே தினக் கூட்டங்களால் அதிரப்போகும் கொழும்பு

பிரதான அரசியல் கட்சிகள் தமது மே தினக் கூட்டங்கள் மற்றும் பேரணிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை நிறைவு செய்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தின நிகழ்வுகள் கொழும்பு – பொரளை கெம்பல் மைதானத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு–னவின் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு மே தின நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பு ஏ.ஈ.குணசிங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் மே தினப் பேரணி இம்முறை கொழும்பு பி.ஆர்.சி. மைதானத்திலிருந்து ஆரம்பமாகி விஹாரமகாதேவி பூங்காவைச் சென்றடையவுள்ளது. அந்தப் பூங்காவுக்கருகில் மே தினக் கூட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மே தினக் கூட்டத்தை கண்டி பொதுச் சந்தைக்கு முன்பாக நடத்தத் திட்டமிட்டுள்ளது. (02)

## ரணிலின் ஆட்டத்தால் 80 வீதமான 'மொட்டு' உறுப்பினர்கள் அதிருப்தி

மொட்டு கட்சியின் 126 எம்.பிக்கள் ரணில் பக்கம் நிற்கின்றனர். எனவே, அவர்தான் மொட்டுக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விடுத்துள்ள அறிவிப்பில் உண்மையில்லை – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இழுத்தடிப்பு, அவருடன் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் சிலரின் செயற்பாடுகளால் சுமார் 80 வீதமான மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியில் உள்ளனர் என்றும் மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன என்று சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, விஜயதாஸ ராஜபக்ச, டிரான் அலஸ் ஆகியோர் சுயாதீனமாகச் செயற்பட ஆர்வம் காட்டினாலும் சில அமைச்சர்களின் அழுத்தங்கள், தலையீட்டால் அவர்களும் அதிருப்தி நிலையில் உள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (02)

## ஆனையிறவில் கோர விபத்து; வடமராட்சி இளைஞர் இறப்பு



ஆனையிறவில் இடம்பெற்ற கோர வீதி விபத்தில் படுகாயம் அடைந்த யாழ். வடமராட்சியைச் சேர்ந்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி, சாரையடியைச் சேர்ந்த 27 வயதான சுந்தரமூர்த்தி சத்ஜன் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இவ்விபத்து இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (02)

## மட்டக்களப்பில் டெங்கால் இளைஞன் பரிதாபச் சாவு

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. 22 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஜனவரி மாதம் தொடக்கம் இன்றுவரை 765 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர்..

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 107 பேர் டெங்கு நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர்.கொக்குவில் பிரதேசத்தில். ஒரே வீட்டில் நேற்று வெள்ளிக்கிழமை (28) நான்கு நோயாளிகள் இனம் காணப்பட்டனர். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி சுகுணன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இன்று வரை 765 நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் செங்கலடியைச் சேர்ந்த 22 வயது இளைஞன் மரணம் அடைந்துள்ளார். இப்பிரிவில் 107 பேர் டெங்கு நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர். வெட்டுக்காடு, இருதயபுரம் ஆகிய கிராமங்களிலும் மட்டக்களப்பு நகர வைத்திய சுகாதார பிரிவில் 35 வீதமா னவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து. மண்முனை வடக்கு பிரதேச செயலப் பிரிவில். இன்று காலை விசேட டெங்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதாக. மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி சுகுணன் மேலும் தெரிவித்தார்.

## பௌசி எம்.பிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### சஜித் கட்சி தீர்மானம்



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி தொடர்பிலான திட்டத்தை நடைமுறைப்படுத்தும் யோசனைக்கு ஆதரவாக வாக்களித்த தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம். பௌசிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகின்றது.

மேற்படி யோசனை மீதான வாக்கெடுப் பைப் புறக்கணிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்தது. எனினும், இந்த விடயத் தில் கட்சி முடிவை மீறி வாக்கெடுப்பில் பங்கேற்று யோசனைக்கு ஆதரவாக பௌசி வாக்களித்தார்.

இந்நிலையிலேயே அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (02)

## கிளிநொச்சியில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்




புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் பெரும் அச்சுறுத்தல் எனத் தெரிவித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி நகரில் இன்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையம் முன்பாகக் கூடிய ஊடகவியலாளர்களும் மனித உரிமைப் போராளிகளும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீள்பரிசீலனை செய்யும்படி வலியுறுத்தி சில மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது போராட்டம் தொடர்பில் கிளிநொச்சி ஊடகவியலாளர்கள் தெரிவித்த ததாவது:

மக்களின் உரிமைகள் சார்ந்து, போராட்டங்கள், அரசின் ஜனநாயக விரோத செயற்பாடுகள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி செய்திகள் எழுதினால் அந்தச் செய்தியை பிரசுரித்தால் அது பயங்கரவாதத்தை ஊக்குவித்தல் அல்லது தூண்டுதல் என வியாக்கியானம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு அந்த ஊடகவி–யலாளரைக் கைது செய்த

2

## ரணில் வீட்டுக்குத் தீ வைப்பு: சந்தேகநபரானார் ஸ்ரீ ரங்கா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சொந்தமான வீட்டுக்குத் தீ வைத்த குற்றச்சாட்டின் கீழ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ. ஸ்ரீ ரங்காவை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபராகப் பெயர் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கமைய, ஜெ. ஸ்ரீ ரங்காவை எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.



இதேவேளை, கடந்த 2011 ஆம் ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்து சம்பவம் தொடர்பான வழக்கில் அண்மையில் கைதான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ. ஸ்ரீ ரங்கா விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (02)

## ஆலய உற்சவத்தில் நேற்று மின் தாக்கி இளைஞன் சாவு



வவுனியா, எல்லப்பர் - மருதங்குளம் பகுதியிலுள்ள ஆலய உற்சவத்தில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு இடம்பெற்ற உற்சவ பூஜையின் போது ஆலயத்தின் கதவினுள் இருந்த மின்சார வயரினை றித்த இளைஞர் எடுத்துள்ளார்.

இதன் போது வயரியில் மின்சார ஒழுக்குக் காணப்பட்ட இடத்தில் இளைஞரின் கை பட்டதையடுத்து மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே இளைஞர் மரணமடைந்துள்ளார்.

29 வயதுடைய நா. கபிலன் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (02)

# சிறுவர்கள் தொலைபேசியில் பொழுதை கழிப்பது அவர்களின் மூளை விருத்தியைக் குறைக்கும்

## உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன் விளக்கம்

பெற்றோர்கள்தமதுவேலைகளைக்கவ–னிப்பதற்காகசிறுவர்களைதொலைபேசியில் பொழுதை கழிக்க விடுவது அவர்களின் மூளை விருத்தியை குறைக்கும் என வலிகாமம்கல்விவலய முன்பிள்ளை பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச. கிருபானந்தன் தெரிவித்தார்.

இணுவில் பொது நூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தில் இடம் பெற்ற சிறுவர் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய சூழ்நிலையில் அநேகமான பெற்றோர்கள்சிறுவர்களை தொலைபேசியில் பொழுதை போக்காக்காட்டி விட்டு தமது செயற்பாடுகளை மேற்கொள்வது பரவலாக அவதானிக்கப்படுகிறது.

ஒரு குழந்தையின் மூளை விருத்தி, 4 தொடக்கம் 7 வயது வரை செல்லும் நிலையில் அக்காலப் பகுதியில் மூளைக்கு கடத்தப்படுகின்ற பல விடயங்களை வைத்து எதிர்காலத்தில் சிறுவர் சிறுமியர் எவ்வாறு உருவாக்கப்படுவார்கள் என விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அநேகமான வீடுகளில் தொலைக்காட்சி நாடகங்களுக்கு வரவேற்பு கிடைத்துள்ள நிலையில் அதனை கண்டு களிப்பதற்காக தமது பிள்ளைகள் இடையூறாக இருக்கக் கூடாது என்பதற்காக பெற்றோரே தொலைபேசி களை பிள்ளைகளிடம் வழங்கி விடுகின்றனர்.

எல்லாப் பெற்றோர்களும் தொலைபேசி களை வழங்குவதாக நான் கூற வரவில்லை, அநேகமாக சமூகத்தில் நடக்கின்ற அவதானிப்புகளை வைத்தே நான் கூறுகிறேன். சிறுவர் மற்றும் குழந்தைகளுக்கு பொழுதுபோக்கை கொடுக்க வேண்டும ானால் எமது மூதாதையர் காலம் தொட்டு பல்வேறுபட்ட கிராமத்து பொழுதுபோக்கு விடயங்கள் இருக்கின்றன.

பனம்மட்டை மற்றும் வாழைத்தண்டில் வெடி அடித்தல், ஓலையில் காத்தாடி செய்தல், கழிவுப் பொருள்களில் தள்ளுவாண்டில் செய்தால் இவ்வாறு பல விடயங்கள் எமது மூதாதையர் காலத்தில் இருந்து பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.

ஆனால் தற்போது இவை எல்லாம் அருவி சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களை பிள்ளைகளுக்கு வாங்கி கொடுக்கிறார்கள்.

குழந்தை பருவத்தில் பிள்ளை சித்திரம் சரியாக கீறுகிறதா அல்லது சரியாக பொருள்களை அடுக்குகிறதா என்பது பிரச்சினை அல்ல.

விரும்பினால் தாய் தந்தையோ அல்லது உறவினர்களோ குழந்தையுடன் சேர்ந்து சித்திரம் கீறுவது மற்றும் ஏனைய பொழுதுபோக்கு விடயங்களை செய்வது அவர்களிடம் இருந்து பிள்ளைக்கு ஆரோக்கியமான அணுகு முறையையும் புரிதலையும் ஏற்படுத்துகிறது.

அதனை விடுத்து பொழுது போக்கு என்று கூறி தொலைபேசி யில் பிள்ளைகளை பிராக்காட்டுவது அவர்களுக்கு ஆரோக்கியமான மூளை விருத்திக்கு ஏற்ற செயற்பாட்டை வழங்காது.

ஒரு குழந்தை மூளை விருத்தி அடையும் வரை தாயின் அன்பும் அரவணைப்பும் அதிகமாகத் தேவைப்படுகின்ற நிலையில் தாய் தந்தை குழந்தையுடன் அதிக நேரம் செலவழிக்க வேண்டும்.

ஆகவே, தற்போது மாறிவரும் உலக மாற்றத்திற்கு தொழிலுக்குச் செல்லும் தாய் பிள்ளைகளுடன் நேரத்தை செலவிடுவது சவாலாக இருந்தாலும் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக சிலவற்றை தியாகம் செய்தே ஆக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# நாணய நிதிய நிபந்தனைகள் கடுமையாயின் சிறந்த யோசனைகளை முன்வையுங்கள்

## நிமல் லான்ஷா கோரிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் கடுமையானவை என்றால் நெருக்கடி ஏற்படுத்தாத யோசனைகளை எதிர்க்கட்சிகள் தாரளமாக முன்வைக்கலாம்.

சிறந்த யோசனைகளுக்கு ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்குவார். சர்வதேச நாணய நிதிய நிபந்தனைகளை பொருளாதார நிபுணர்கள் தயாரித்தார்களே தவிர, ஜனாதிபதி தயாரிக்கவில்லை என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஷா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் பொருளாதார நிபுணர்களால் தயாரிக்கப்பட்டதே தவிர ஜனாதிபதியின் தனிப்பட்ட தீர்மானமல்ல, பொருளாதார மீட்சிக்கான கொள்கைத் திட்டத்தை மத்திய வங்கி முன்வைத்துள்ளது.

பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தைக் காட்டிலும் சிறந்த திட்டங்கள் ஏதும் காணப்படுமாயின் எதிர்க்கட்சிகள் அதை தாராளமாக முன்வைக்கலாம். சிறந்த திட்டங்களை ஜனாதிபதி முழுமையாக நடைமு–றைப்படுத்துவார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளிடம் பலமுறை வலியுறுத்தினார். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அரசாங்கத்துடன் ஒன்றிணைந்தால் தமது எதிர்கால அரசியலுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற அச்சத்தில் எவரும் அரசாங்கத்துடன் ஒன்றிணையவில்லை. ஜனாதிபதி தனித்த நபராக ஆட்சியை பொறுப்பேற்று குறுகிய காலத்துக்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லுங்கள் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தினார்கள். ஆனால் தற்போது சர்வதேச நாணய நிதியத்துக்கும், முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு எதிராக கருத்துரைக்கிறார்கள். இவ்வாறானவர்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவார்கள். – என்றார்.

# சுயாதீனமாகச் செயற்படக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுங்கள்

## பெப்ரல், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கடிதம்

பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தங்கள் இன்றி, சுயாதீனமாக பணிபுரிவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பெப்ரல் அமைப்பு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்கு பெப்ரல் அமைப்பால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

பொலிஸ் திணைக்களத்தில் அரசியல் தலையீடு காணப்படுவதன் காரணமாக நடுநிலைமையை பாதுகாக்கும் வகையில் செயற்படுகின்றமை சிக்கலாகி வருகிறது.

அரசியல்வாதிகளின் தூரநோக்கற்ற ஆட்சியால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில் பொலிஸ் அதிகாரிகளுக்கு சுயாதீனமாக செயற்படுவதற்குள்ள சந்தர்ப்பம் இல்லாமற்போகுமாயின் சட்டத்தை மதிக்கும் சாதாரண பொது மக்களும் விரக்தியடைவதைத் தவிர்க்க முடியாது.

இதன் காரணமாக பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தங்கள் இன்றி, சுயாதீனமாக பணிபுரிவதற்கான சூழலை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாமனிதர் சிவராமின் நினைவதினம் இன்று மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு





(பழுவூரான்)

தராகி என்று உலகளவில் பேசப்பட்ட சிரேஷ்ட ஊடகவி–யலாளர் மாமனிதர் சிவராமின் பதினெட்டாவது நினைவுதினம் இன்று சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஸ்ணகுமார் தலைமையில் மட்டக்களப்பு காந்திப் பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது. அங்கு அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத் தூபிக்கருகாமையில் சிவராமின் உருவப் படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாமனிதர் சிவராமின் திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகருமான பா.அரியநேத்திரன், சிரேஷ்ட ஊடகர் சிவம் பாக்கியநாதன் ஆகியோர் இணைந்து அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து பிரமுகர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அகல்விளக்கேற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பா.அரியநேத்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் தெரிவித்ததாவது:

மாமனிதர் சிவராம் உட்பட படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளருக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க சர்வதேசம் உதவிட வேண்டுமென்ற அறைகூவலை விடுத்தார்.

# தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்கினால் வடக்கு –கிழக்கை பொருளாதார கேந்திர மையமாக்குவோம்

## சாணக்கியன் அரசுக்கு சவால்



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பால் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியாது. நாட்டில் புரையோ–டிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கினால் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் முதலீடுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பொருளாதார கேந்திர மையமாக எம்மால் மாற்றியமைக்க முடியும். அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான மூன்றாவது நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மீதான மூன்று நாள் விவாதம் பயனற்றது. இந்த விவாதத்தால் அரச நிதி வீண்விரயமாக்கப்பட்டுள்ளது.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னெடுக்கப்பட்ட பேச்சு, கடந்த செப்ரெம்பர் மாதம் கைச்சாத்திடப்பட்ட ஊழியர் மட்ட இணக்கப்பாடு தொடர்பான அறிக்கை ஆகியவற்றை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு அரசாங்கத்திடம் பலமுறை வலியுறுத்தினோம்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அது தொடர்பான விவாதம் இடம்பெற்றிருந்தால் நிபந்தனைகளை மறுசீரமைத்திருக்கலாம். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு முதல் தவணை பெற்றுக்கொண்டதன் பின்னர் ஒப்பந்தம் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டமை பயனற்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் பணிகளை இலங்கை துரிதமாக நிறைவு செய்தது என சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளமை அடிப்படையற்றது.

பொருளாதாரப் பாதிப்பை எதிர்கொண்ட நாடுகள் 46 நாள்கள் முதல் 100 நாள்களுக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டன. இலங்கை ஏழு மாதம் காலம் தாமதமான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டது.

வரி கொள்கை திருத்தம் தொடர்பில் நாணய நிதியம் வழங்கிய ஆலோசனைகளை அரசாங்கம் வெகுவிரைவாக அமுல்படுத்தியது. ஆனால் அரச நிர்வாக கட்டமைப்பின் மறுசீரமைப்பு தொடர்பில் முன்வைத்த ஆலோசனைகளை அரசாங்கம் மறந்துவிட்டது. ஊழல் ஒழிப்பு தொடர்பில் நடைமுறைக்கு பொருத்தமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் வழமை போலவே செயற்படுகிறது.

சர்வதேச நாணய நிதி ஒத்துழைப்பால் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண முடியாது. நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கினால் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் முதலீடுகளை பெற்றுக் கொள்ள முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பொருளாதார கேந்திர மையமாக எம்மால் மாற்றியமைக்க முடியும். அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும். –என்றார்.

## குடும்பஸ்தர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார். நேற்றிரவு 10 மணியளவில் இவரின் வீட்டுக்குள் வாள்களுடன் புகுந்த இனந்தெரியாத நபர்கள் கொலையைப் புரிந்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. குறித்த குடுமபஸ்தரின் உடலில் 10 இற்கும் மேற்பட்ட வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன. சடலம் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுவரும் நீர்கொழும்பு பொலிஸார், கொலைச் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைதாகவில்லை என்று தெரிவித்தனர். (02)

## கிளிநொச்சியில்...

மாதங்கள் தடுத்து வைக்கக்கூடிய அதிகாரத்தை இந்தச் சட்டம் கொண்டுள்ளது.

இங்கே இருக்கின்ற ஆபத்து என்ன வெனில் பெரும்பாலான ஊடகவியலாளர்கள் சட்டத்தின் இந்த ஏற்பாட்டின் மூலம் பழிவாங்கப்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு. பொலீஸாரின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் ஊடகவி–யலாளர்கள்கூட பல சந்தர்ப்பங்களில் இச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு தடுத்து வைக்கப்படமுடியும். இது ஊடக சுதந்திரத்திற்கும், ஊடகவியலாளர்களின் சுயாதீனமான செயற்பாடுகளுக்கும் பெரும் அச்சுறுத்தல்.

இதனால் ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறையின் ஜனநாயக குரல் நசுக்கப்படும் அது மாத்திரமன்றி சமூக ஊடகங்களின் கருத்துச் சுதந்திரம்கூட இதனால் அடக்கப்படுகிறது.

எனவேதான் இச் சட்டமூலத்திற்கு நாம் எமது கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்துகின்றோம்

இவ்வாறு கிளிநொச்சி ஊடக அமையத்தின் செயலாளர் மு. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். இங்கு கருத்துரைத்த ஊடக அமையத்தின் தலைவர் க. திருலோகமூர்த்தி தெரிவித்ததாவது:

இச்சட்டம் ஊடகவியலாளர்களை மட்டுமன்றி பொது மக்களையும் பாதிக்கிறது. எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்படும். பொது மக் களின் கருத்துச் சுதந்திரம் பாதிக்கப்படும்,

தமிழ், சிங்கள இளைஞர் கள் பழி வாங்கப்படுவார்கள் எனவேதான் இச் சட்டமூலம் நிறைவேற்றப்படக்கூடாது என்பதனை நாம் வலியுறுத்துகின்றோம் – என்றார்.

# தேயிலை மலையிலிருந்து தொழிலாளி சடலமாக மீட்பு

பொகவந்தலாவை, பொகவானை தோட்டத்தின் 11ஆம் இலக்க தேயிலை மலை குயிலிருந்து ஆணொருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

தேயிலை மலைக்குத் தொழிலுக்குச் சென்ற பொகவானை தோட்டத்தைச் சேர்ந்த 78 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லன் ராமசாமி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காகச் சடலம் கிளங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொகவந்தலாவைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)

காலைக்கதிர் மாலைப்பதிப்பு


# தமிழர்களுக்கு யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தூதரகம் தேவை

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை




யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தூதரகக் கிளையைத் திறக்குமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தை இந்நாளில் வேண்டுகிறோம் என தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் சிவராமின் நினைவுதினம் நேற்று (வெள்ளிக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டதன் பின்னர் குறித்த சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப் படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும் தமிழ் இறையாண்மைக்காகவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவிகளைப் பெறுவதற்கான எமது தொடர்ச்சியான போராட்டத்தின் 2259 நாள் இன்று.

இன்று, 18 வருடங்களுக்கு முன்னர், 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் எமது அன்பிற்குரிய தமிழ் ஊடகவியலாளர் தாராக்கி சிவராம் படுகொலை செய்யப்பட்டார்.

நம் வாழ்வில் நம்மை விட்டு விலகாத சிறப்பு மனிதர்கள் இருக்கிறார்கள், அவர்கள் மறைந்த பிறகும் எம்மிடமே இன்னும் இருக்கிறார்கள், அவர்களில் தாராக்கி சிவராமும் ஒருவர்.

இன்று தமிழர்களுக்குக் கடினமான நாள், எங்கள் இதயங்கள் வலிக்கின்றன. இந்த நேரத்தில் சிவராமின் குடும்பத்துக்கு எங்கள் இதயம் செல்கிறது. சிவராமின் இதழியல் ஆய்வு தமிழர்களுக்கும் அமெரிக்க அரச துறைகளுக்கும் பொக்கிசமாக இருந்தது.

இலங்கையில் இனப் போரின் போது, இனப் போரை ஆழமாக அவதானித்த அமெரிக்க அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

இலங்கையில் வடமேல் மாகாண ஆளுநரும், முன்னாள் இலங்கை கடற்படையின் தளபதியான வசந்த கரன்னாகொட மற்றும் அவரது குடும்பத்தினரையும் நாட்டுக் குள் நுழைய அமெரிக்கா தடை விதித்துள்ளதை வரவேற்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் தூதரகக் கிளையைத் திறக்குமாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தை இந்நாளில் வேண்டுகிறோம்.

இந்த அமெரிக்க அலுவலகத்தை திறப்பதன் மூலம் தமிழர்கள் பகுதியில் என்ன நடக்கிறது என்பதை அமெரிக்கா கண்காணிக்க முடியும்.

போதைப்பொருள் கடத்தல், இரவு நேர கொலைகள் மற்றும் கொள்ளைகள், சிங்கள உளவாளிகளின் அச்சுறுத்தல், இனப் படுகொலை, இந்து கோவில்கள் மீதான ஆக் கிரமிப்பு, அடக்குமுறை மற்றும் காணி ஆக்கிரமிப்பு போன்ற அனைத்து சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் அமெரிக்க இருப்பு முற்றுப்புள்ளி வைக்கும் என்பதை பாதிக்கப்பட்டவர்களாகிய நாங்கள் உணர்கிறோம்.

உலக மனித உரிமைகளின் பாதுகாவலராக அமெரிக்கா இருப்பதால், யாழின் அமெரிக்கத்தூதரகம் இலங்கை அரசிடம் வேலை செய்யும் ஒவ்வொரு சிங்கள, தமிழ் அடிமைகளும் தங்கள் அசிங்கமான தொழிலை நிறுத்துவார்கள். அதேபோன்று ஐரோப்பிய ஒன்றியத்தின், ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழுவை யாழ்ப்பாணத்தில் ஓர் அலுவலகம் திறக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். யாழ்ப்பாணத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகக் கிளை, தமிழர் பிரதேசத்தில் சீனப் படையெடுப்பை நிறுத்தும்.

முல்லைத்தீவு, பூநகரி , கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் சீனர்கள் பெருமளவிலான காணிகளை கொள்வனவு செய்யத் தயாராகி வருகின்றனர் என வதந்தி பரவி வருகின்றது என்பதை இங்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமெரிக்கத் தூதர் ஜூலி சுங் இந்த செய்தியை வாஷிங்டனுக்கு தெரிவிப்பார் என்று நம்புகிறோம், இதே நேரத்தில் நாங்கள் அமெரிக்க வெளியுறவுத்துறைக்கு கோரிக்கை கடிதத்தையும் அனுப்புகிறோம். – என்று தெரிவித்தார்.

# மண் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வழங்கக்கோரி மட்டக்களப்பில் கொடும்பாவி எரித்து ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கனிப் பொருள் அகழ்வு அனுமதிப் பத்திரங்களை வழங்கக்கோரி 'எங்களையும் வாழ விடுங்கள்' என்னும் தொனிப்பொருளில் கனிமம் அகழ்வு அனுமதிப் பத்திர உரிமையாளர் சங்கம் 15 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (வெள்ளிக்கிழமை) கல்லடியிலுள்ள புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணிமனைக்கு முன்னால் அமைச்சரின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டு மண் ஏற்றும் கனரக வாகனங்களுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலமாக மாவட்ட செயலகம் சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டத்தில் மண் அகழ்வுக்காக புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணிமனையால் வழங்கப்பட்ட மண் அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்கள் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து கனிமம் அகழ்வு அனுமதிப்பத்திர உரிமையாளர் சங்கம் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்தது.

இதனையடுத்து கல்லடியிலுள்ள புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணிமனைக்கு முன்னால் சட்டரீதியாக மண் அகழ்வில் ஈடுபடுவர்கள், தொழிலாளர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் தமது கனரக வாகனங்களுடன் நேற்று காலை 8 மணிக்கு ஒன்று திரண்டனர்.

இதன்போது அகழ்வு அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு இலஞ்சம் வழங்கும் நடைமுறையை இல்லாமல் செய், அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையில் அரசியல்வாதிகளின் தலையீட்டை நிறுத்து, சங்கத்தின் ஊடாக சங்க உறுப் புரிமை பெற்றவர்களுக்கு வழங்கு, அரசியல்வாதிகளால் ஆலோசனை வழங்கப்பட்டு அதிகாரிகளால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள அனைத்து அனுமதிப் பத்திரங்களை மீள் பரிசீலனை செய்து மீள வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுற்றாடல் அமைச்சின் புதியபொறிமுறைகள் இல்லாமல் செய்து ஊழல் வாதிகளிடம் இருந்து எமது சுற்றாடலை பாதுகாக்க ஜனாதிபதி குழு நியமிக்கவேண்டும், தடுக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட அகழ்வு அனுமதிப் பத்திரங்களை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் , அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டது தொடர்பாக ஒழுங்கான விசாரணை நடாத்த வேண்டும் அதே வேளை சுற்றாடல் அமைச்சரால் தனிப்பட்ட சிலருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும்.

சுற்றாடல் அமைச்சரால் கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரம் இணைப்பாளராக நியமிக்கப்பட்ட எந்திரி பாரிஸ் நியமனம் தொடர்பாக விசாரணை செய்ய வேண்டும், இந்த தொழிலை நம்பி 10 ஆயிரம் குடும்பம் வாழ்ந்துவருகின்றது போன்ற கோரிக்கைளை முன்வைத்து அமைச்சருக்கு எதிராக கோங்கள் எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து சுற்றாடல் அமைச்சரின் உருவப் பொம்மைக்கு தீயிட்டு எரித்த பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கல்லடி பாலம் ஊடாக அரசடி சென்று அங்கிருந்து நகர் மணிக்கூட்டு கோபுரம் ஊடாக மாவட்ட செயலகத்தை சென்று பகல் 11.30 மணிவரை ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில் உதவி அரசாங்க அதிபர் மற்றும் புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்க மாவட்ட பணிப்பாளர் காரியாலயத்தில் வரை சென்றது.

இதனையடுத்து மாவட்ட செயலகத்தின் முன்னால் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை உதவி அரசாங்க அதிபர் மற்றும் புவிசரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் மாவட்ட பணிப்பாளர் காரியாலயங்களில் இருந்து வந்து சந்தித்து அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து இதற்கான தீர்வை தமது தலைமைகாரியாலயத்துக்கு அறிவித்து இது தொடர்பாக ஒரு வாரத்தில் தீர்வு பெற்றுதருவாக தெரிவித்ததையடுத்து அவர்களிடம் ஜனாதிபதி மற்றும் அதிகா ரிகளுக்கான மகஜரை கையளித்த ஆர்பாட்டகாரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.



# இலங்கையின் பொருளாதார மாற்றத்துக்கு இந்தோ – ஜப்பான் ஒத்துழைப்பு சிறந்தது

## பாத்ஃபைண்டர் அறக்கட்டளை தெரிவிப்பு

இலங்கையின் பொருளாதார மாற்றத்துக்கு இந்தோ-ஜப்பானிய ஒத்துழைப்பை பரிந்துரைப்பதாக குறிப்பிட்டுள்ள பாத்ஃபைண்டர், இலங்கை – இந்தியா – ஜப்பான் ஒத்துழைப்புக்கான நடுத்தர மற்றும் நீண்ட கால மூலோபாயம் நாட்டின் பொருளாதார மாற்றத்துக்கு பங்களிப்பு செய்யும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக 139 பக்கங்களை கொண்ட விசேட அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ள பாத்ஃபைண்டர் அறக்கட்டளையகம், முத்தரப்பு ஒத்துழைப்புகளின் அவசியம் தொடர்பாகப் பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளது.

ஆந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கை முன்னெப்போதும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வேளையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் வேலையில்லா திண்டாட்டம், பணவீக்கம் மற்றும் அதிகரித்து வரும் வறுமை போன்றவற்றால் நாட்டில் குறிப்பிடத்தக்க பொருளாதார பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தற்போதைய நெருக்கடிக்கான முக்கிய காரணங்களாக பெரும்பாலும் சமீப காலங்களில் பொருளாதாரக் கொள்கைகளின் தவறான நிர்வாகம், கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக்குறை மற்றும் அரசாங்க வருவாயில் ஏற்பட்ட சரிவு என்பன வழிவகுத்தன. இதன் விளைவாக, வரலாறு காணாத பொருளாதார சவால்களை இலங்கை எதிர்கொண்டுள்ளது.

நாட்டின் முன்னேற்றத்தை அச்சுறுத்தும் வகையிலுள்ள பொருளாதாரத்தை மீண்டும் எழுப்புவதற்கான ஆக்கபூர்வமான திட்டங்கள இலங்கைக்கு அவசியமாகின்றன. எதிர்காலத்தில் இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்படாமல் தடுக்க நிலையான தீர்வுகள் காணப்பட வேண்டுமானால், சர்வதேச ஒத்துழைப்புடன் அபிவிருத்திக்கான தெளிவான நடுத்தர மற்றும் நீண்ட கால மூலோபாய அணுகுமுறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட அதன் கொள்கை திசைகளை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

நட்பு நாடுகளுடனான வளர்ச்சி ஒத்துழைப்பு தொடர்பாக இலங்கையின் சமீபத்திய கொள்கை உரைகளில் வெளிப்படுகிறது. சர்வதேச அமைப்புகளுடன் ஆலோசனை பெற்று அபிவிருத்தி பாதையில் இலங்கை இறங்க வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக இந்தோ-ஜப்பானிய ஒத்துழைப்புக்கான நடுத்தர மற்றும் நீண்ட கால மூலோபாயம் இலங்கையில் பொருளாதார மாற்றத்துக்கு ஆதரவளிக்கும். இந்தியாவுடனான விநியோக இணைப்பு, திருகோணமலையை எரிசக்தி மையமாக மேம்படுத்துதல், துறைமுகங்கள், விமான நிலையங்கள், ரயில் மற்றும் படகு போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சியை இலக்காகக் கொண்ட திட்டங்கள் இலங்கைக்கு பயனளிக்கும். அதே போன்று சுற்றுலா, கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர்புகள் இலங்கையின் வளர்ச்சி செயல்முறைக்கு, நடுத்தர மற்றும் நீண்ட கால அடிப்படையில் முக்கியமானதாக இருக்கும் என பாத்ஃபைண்டர் பரிந்துரைத்துள்ளது.

# கடன் மறுசீரமைப்பை முறையாக மேற்கொண்டால் 14 பில்லியன் டொலர்கள் நிவாரணமாக பெறலாம்

## அலி சப்ரி கூறுகிறார்



நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியம் சில வழிகாட்டல்களையே எமக்கு வழங்கியுள்ளது அதனை பின்பற்றுவதும் கைவிடுவதும் எமது கைகளிலேயே தங்கியுள்ளது.

என்றாலும் கடன் மறுசீரமைப்பை முறையாக மேற்கொண்டால் அதன் மூலம் நாட்டுக்கு 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிவாரணமாகப் பெற்றுக்கொள்ள முடி யும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கான தீர்மானம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதால் மாத்திரம் எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துவிடாது. எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான வேலைத்திட்டங்களை நாங்களே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஒரு வைத்தியர் போன்றது. நோய் குணமாவதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற வழிகாட்டல்களையே அது எமக்கு கூறும். அந்த வழிகாட்டல்களைப் பின்பற்றுவது எமது கைகளிலேயே தங்கியுள்ளது. அதனை விட வேறு மாற்று வழி இருந்தால் அதனை எவரும் முன் வைக்கலாம்.

நாடு வரலாற்றில் எப்போதும் இல்லாதவாறு கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதை நாம் அனைவரும் அறிவோம். நாம் அதை சுலபமானது எனக் கூறினாலும் அல்லது ஒருவர் மீது ஒருவர் விரல்களை நீட்டினாலும் அதற்கு பல்வேறு காரணங்களைக் கூற முடியும்.

நாட்டில் நிலவிய கொரோனாத் தாக்கம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல், உக்ரைன் யுத்தம் ஆகியவை எமது பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

அத்துடன் நாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களில் சில குறைபாடுகள் காணப்பட்டன எனவும் குறிப்பிட வேண்டும். அதனை நாம் ஒரு போதும் மறுக்க முடியாது.

அத்துடன் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்ல வேண்டும் என நானும் அமைச்சர் ரமேஷ் பத்திரனவும் உதய கம்மம்பிலவும் ஒரே சந்தர்ப்பத்திலேயே அமைச்சரவையில் தெரிவித்திருந்தோம்.

அதன் போது வாசுதேவ நாணயக்கார மாத்திரமே அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனைய அனைவருமே அதனை ஏற்றுக் கொண்டனர். எனினும் சில சக்திகள் அதன் கால தாமதத்துக்கு காரணமாயின.

மேலும் அதிகம் சம்பாதிப்போர் அதிக வரியை செலுத்த வேண்டும். வெளிநாடுகளிலும் அதுதான் நடைமுறையில் காணப்படுகிறது. சில நாடுகளில் நூற்றுக்கு 56 வீதம் அறவிடப்படுகிறது.

நாட்டின் தேசிய வருமானத்தில் சுமார் 76 வீதம் கடன்களை மீள செலுத்துவதற்காக செலவிடப்படுகிறது. வட்டி மற்றும் கடன் தொகை என இவ்வாறு செலுத்தப்படுகிறது. இதனை நிலையானதாக முன்னெடுக்க முடியாது. அவ்வாறானால் இந்தக் கடனை மீள செலுத்து-வதற்கான நிலையான திட்டம் என்ன என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

மேலும் கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளக்கூடாது அவ்வாறு மேற்கொண்டால் அதுவே பெரும் பிரச்சினையாகி விடும் என சிலர் தெரிவிக்கின்றனர். அவ்வாறானால் எவ்வாறு இந்த கடன்களை மீள செலுத்த முடியும்?

நாம் கடன் மறுசீரமைப்பு முறையாக மேற்கொண்டால் எமக்கு 14 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை நிவாரணமாக பெற்றுக் கொள்ள முடியும். அது வேண்டாம் என்றால் வேறு எங்காவது இருந்து அவ்வாறான தொகையை கொண்டு வாருங்கள்.

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் எமது ஏற்றுமதி வருமானம் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. ஏற்றுமதி வரு மானத்தை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டம் அவசியமாகிறது. அது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியம் நமக்கு சில வேலைத் திட்டங்களை முன் வைத்துள்ளது. அதனை நாம் ஏற்க வில்லை என்றால் மாற்று வேலைத்திட்டம் என்ன என்பதை இதனை விமர்சிப்போர் தெளிவுபடுத்த வேண்டும். வெறுமனே விமர்சனங்களை முன் வைப்பதை விடுத்து மாற்று வேலைத் திட்டங்கள் இருந்தால் அவற்றை முன்வைக்க வேண்டும். – என்றார்.

# லுணுகம்வெஹரவில் ஒருவர் சுட்டுகொலை



லுணுகம்வெஹெர பிரதேசத்தில் வீடொன்றில் இருந்த நபர் ஒருவர் மீது மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

37 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சிவாராமுக்கான நீதி...

பத்திரிகையாளர் "தராக்கி" எனப்படும் சிவராமின் நினைவு நாள் இன்று. அவர் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுகொலைக்கான நீதி இன்றளவும் வழங்கப்படவில்லை. தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மத்தியிலிருந்து இலங்கை முழுவதும், சிங்கள வாசகர்ளாலும் அறியப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தவர் சிவராம். ஒரேயிரவில் அவருடைய கதையை முடித்துவிட்டார்கள். ஆனால் குற்றவாளிகள் இன்னும் சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பது அத்தகைய குற்றவாளிகளை தண்டனையின்றி அப்படியே வாழ விடுவதுதான் என்கிறது இன்றைய ஆளும் தரப்பு.

தராக்கி கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் எழுதி வந்தவர். அதனால் அவரை சிங்கள வாசகர்களும் சிங்களப் பத்திரிகையாளர்களும் நன்கு அறிவார்கள். அதேநேரம் விடுதலைப் புலிகளின் உத்தியோகப்பற்றற்ற குரல் போன்று செயற்பட்டு வந்த தமிழ் நெற் என்கிற இணையத் தளத்தின் ஆசிரியராகவும் அவர் செயற்பட்டார். கொழும்பைத் தளமாகக் கொண்டுதான் அவர் இயங்கி வந்தார்.

உயிராபத்து இருக்கும் சூழல் தெரிந்துமேதான் அவர் கொழும்பிலிருந்து பணியாற்றிவந்தார். நான் சரியென்று உறுதியாகக் கண்டவற்றை எழுதுகின்றேன், அதற்கான விளைவுகளையும் சந்திக்கத் தயாராக இருக்கின்றேன், ஒழிவிடமாட்டேன் என்பதுதான் அவரது கொள்கையாக இருந்தது. அதனைச் சகிக்க முடியாதவர்கள், எதிர்க் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க முடியாதவர்கள் அவரது குரலை மௌனமாக்கினர்.

2005 சித்திரை 28ஆம் நாள் அவர் கொழும்பில் வைத்துக் கொல்லப்பட்டார். இன்றோடு அவர் கொலை செய்யப்பட்டு 18 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், அவரது படுகொலைக்கான நீதி நிலைநாட்டப்படவேயில்லை. அவரது கொலையுடன் தொடர்புடையவர் என்று ஒருவரைக் கைது செய்தார்கள். ஆனால், யாரும் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படவில்லை. இந்தக் கொலையைப் பின்னின்று இயக்கியவர்கள் யார் என்பது கண்டறியப்படவில்லை.

சிவராம் கொலையில் மட்டுமல்ல, லசந்த விக்கிரமதுங்கவின் கொலையில், எக்னொலிகொடவின் காணாமற்போதலில் மற்றும் நிமலராஜன், நடேசன் உள்ளிட்ட இன்னும் பல தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகளில், காணாமலாக்கப்படுவதில் குற்றவாளிகளும்அவர்களை இயக்கியவர்களும்இன்னும்நடமாடுகிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் நீதி கிடைக்க வழி செய்வோம் என்று கூறிக்கொண்டு ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தவர்கள் எல்லோரும் பதவிக் காலம் முடிந்தோ பதவியை இழந்தோ வெளியேறிவிட்டார்கள். ஆனால், குற்றவாளிகள் இன்னும் மகிழ்ச்சியாக சுதந்திரமாக நடமாடிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்குப் பதிலாக நல்லிணக்கத்தின் பெயரால், அவர்கள் தற்போது அனுபவித்துவரும் சுதந்திரத்தை மேலும் பாதுகாக்கவே தற்போதைய ஆளும் தரப்பும் முற்படுகின்றது. அதனால்தான் போர்க் குற்றங்களோடு தொடர்புபட்டவர் என்று குற்றஞ்சாட்டப்படும் அட்மிரல் வசந்த கரன்னகொடவை அமெரிக்கா தனது கறுப்புப் பட்டியலில் சேர்த்தமை தமது ஆட்சியின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடு என அயலுறவுத்துறை அமைச்சர் வெட்கமே இல்லாமல் நியாயப்படுத்துகின்றார்.

இதுபோன்றே சிவராம் படுகொலையிலும் ஏனைய பத்திரிகையாளர்களின் படுகொலைகள் தொடர்பிலும் நீதியைப் புதைத்து நல்லிணக்கம் தேட ஆட்சியாளர்கள் முற்படுகிறார்கள். ஆனால், நீதி நிலைநாட்டப்படாமல் தமிழர்களுடன் நல்லிணக்கம் காண்பது வெறும் கனவுதான் என்பதை அவர்கள் விரைவிலேயே புரிந்து கொள்வார்கள்.

## இனவாதம் என்ற மனநோயால் ஆட்சியாளர்கள் பாதிப்பு இவ்வாறானவர்களால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது

### கஜேந்திரன் எம்.பி. சாட்டை



ஆட்சியாளர்கள் இனவாதம் என்ற மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறானவர்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

இனவாத மன நோய்க்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒற்றையாட்சி முறையை நீக்கி சமஷ்டியை அமுல்படுத்தி ஒரு தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் சமஷ்டி கட்டமைப்பை உருவாக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான மூன்றாவது நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

இலங்கை 1965 ஆம் ஆண்டு முதல் 16 தடவைகள் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது.

இதற்கு முன்னர் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட முன்னர் சர்வதேச நாணய நிதியத்ற்கு சென்றிருந்த போதும். இம்முறை நாடு வங்குரோத்து நிலை அடைந்ததன் பின்னரே நாணய நிதியத்தை ஆட்சியாளர்கள் நாடினார்கள்.

நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் என்ற பழியை சுமந்துகொண்டிருப்பவர்கள் இந்த நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு தாங்கள் பொறுப்புதாரிகளாக இருக்கக் கூடாது என்பதற்காக நாடாளுமன்றத்தை நாடியுள்ளார்கள்.

இந்த உடன்படிக்கையை ஆதரிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் ஈழத்தமிழர் தேசத்தவர்களான நாங்கள் ஆழமாக பரிசீலிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நீண்ட காலமான நாட்டில் நிலவும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் எவ்வித முன்னேற்றங்களும் இல்லாத நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியால் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பதை எமது கட்சியின் தலைவர் இந்த சபையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈழத் தமிழ் தேசத்தின் மீது கடந்த நான்கு ஐந்து தசாப்தங்களாக தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் பாரிய ஆக்கிரமிப்பு யுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

சர்வதேச நாடுகள், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் மற்றும் நாட்டின் உற்பத்திகள் மூலமாக கிடைத்த வருமானத்தை எமது மக்களின் இனவழிப்புக்காக பயன்படுத்தப்பட்டது. இன்னுமொரு பக்கத்தில் கொள்ளையடிக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று சலுகைகள் மூலம் உதவிகள் பெறும் ஆட்சியாளர்கள் எங்கள் தேசத்தைக் மீள கட்டியெழுப்ப என்ன சலுகைகளை வழங்கினார்கள்.

இந்நிலையில் எங்கள் தலைவர் கடந்த இரண்டரை வருடங்களாக ஒருவிடயத்தை இந்த சபையில் வலியுறுத்தி வருகின்றார்.

தமிழர் தேசத்தை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விசேடமான பிராந்தியமாக பிரகடனப்படுத்த வேண்டும். அதற்காக விசேட நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இது தொடர்பில் சர்வதேசத்துக்கும் கூறியுள்ளோம். ஆனால் அது தொடர்பில் கவனம்செலுத்தவில்லை. இந்த சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையில் பிரதான விடயமாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்கியிருக்க வேண்டும். அந்த நிபந்தனையை விதிக்கத் தவறியுள்ளது.

சில நாடுகள் இங்கு தங்களின் ஆதிக்கத்தை செலுத்து–வதற்காக இதுபோன்ற உடன்படிக்கைகளை பயன்படுத்துகின்றன. ஆனால் எந்தவொரு நாடோ இனப் பிரச்சினையைர் தீர்ப்பதற்காக நிபந்தனைகளை விதிக்கவில்லை. அரசாங்கம் ஒரு மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டை ஆட்சி செய்பவர்கள் இனவாதம் என்ற மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்க ளிடம் இவ்வாறான உதவி களை வழங்கி நாட்டைக் கட்டி யெழுப்ப முடியாது. இனவாத மன நோய்க்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்காக தமிழர்தேசம்அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒற்றையாட்சி முறையை இல்லாது செய்து சமஷ்டியை கொண்டு வர வேண்டும். ஒரு தேசம், இறைமை, சுயநிர்ணயஉரிமையை உறுதிப்படுத்தும் சமஷ்டி கட்டமைப்பை உருவாக்க வேண்டும். – என்றார்.

## இனவாதம் மற்றும் மதவாதம் இல்லாமலாக்கப்படவேண்டும்

### ரிஷாத் வலியுறுத்து



சர்வதேச நாணய நிதியத்திடம் மீண்டும் கையேந்தி நிற்காமல் இருக்கும் வகையில் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக இனவாத மதவாதம் தலைதூக்குவதை இல்லாமலாக்க வேண்டும்.

மேலும் நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நிலையிலும் அமைச்சுக்களில் திருட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மோசடிகளை நிறுத்தாமல் நாட்டை முன்னேற்ற முடியாது என ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்கான தீர்மானம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

நாடு பொருளாதார ரீதியில் பாரியளவில் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி நாட்டை மீட்பதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கையை வெளிக்கொண்டுவர உதவியமைக்காக சர்வதேச நாணய நிதியத்துக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரம் இலங்கை யைக் கட்டியெழுப்புவதற்கான எமது ஆலாசேனைகளையும் நாங்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கிறோம்.

மேலும் இந்தியா பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த போது 1991ஆம் ஆண்டு முதல்தடவையாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொண்டு, பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வரைபை அன்று நிதி அமைச்சராக இருந்த மன்மோஹன் சிங் முன்வைத்து செயற்படுத்தினார். அதன் காரணமாக இந்தியா இன்று அபிவிருத்தி அடைந்த நாடாக மாறி இருக்கிறது.

அதேபோல் நாங்கள் 16 தடவைகள் நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் தற்போது, நாடு வங்குரோத்து அடைந்த நிலையில் 17 தடவையாகவும் நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொண்டுள்ளோம்.

அதனால் மீண்டும் நாணய நிதியத்திடம் கையேந்தி நிட்காமல் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்காக வரைவு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும்.

அத்துடன் நாட்டை மீள கட்டியெழுப்ப சர்வதேசநாணய நிதியத்தின் உதவி மாத்திரம் போதாது. உற்பத்திகளை அதிகரித்து ஏற்றுமதிகளை அதிகரிக்கவேண்டும். சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். என்றாலும் அதற்கான முதலீட்டாளர்கள்வந்தாலும் தேவையான சூழல் நாட்டில் இல்லை.அதனைஏற்படுத்த வேண்டும். அதேநேரம் மோசடிகளை நிறுத்த வேண்டும்.ஆனால்நாடு இன்று பாரிய நெருக்கடியில்உள்ள நிலையிலும் சில அமைச்சர்கள் அமைச்சுக்களில் மேற்கொண்டு வரும் திருட்டு நடவடிக்கைகளை ஜனாதிபதி கண்டும் காணாமல் இருக்கிறார். இவ்வாறான மோசடிகளை நிறுத்தாமல் நாட்டை முன்னேற்ற முடியாது.

மேலும் வடக்கையும் தெற்கையும் இணைக்கின்ற மன்னார், புத்தளம் பாதை யுத்தத்துக்கு பின்னர் திறக்கப்பட்டு, கோட்டாபய ராஜபக்ஷ வந்த பின்னர் மீண்டும் பாதையை மூடினார்கள். இந்த பாதையூடாக யாழ்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வரும் போது 100 கிலோமீற்றர் குறைவாகும்.

இதனால்உட்பத்திபொருள்களை இந்த பாதையூடாக சந்தைப்படுத்த வரும் போது பாரியளவில் செலவுகளைக் குறைக்க முடியும். இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்து நடவடிக்கை எடுத்தபோதும் வீதி அதிகாரசபை இந்த விடயத்தில் முரண்டு பிடித்ததுபோல் செயற்பட்டு வருகிறது.

அதேபோன்று சில மத குருமார் புல்மோட்டை போன்ற பகுதிகளில், அங்கு அவர்கள் ஒரு குடும்பம்தான் இருக்கிறது. ஆனால், ஆயுதங்களுடன் சென்று தமிழ், முஸ்லிம் மக்களின் ஆயிரக்கணக்கான காணிகளை அபகரித்து வருகின்றனர். இவ்வாறு செயற்படுகின்றபோது, அது ஊடகங்களில் அனைத்து தொழிகளிலும் வெளிவருகிற்னபோது, சர்வதேச நாடுகள் எமது நாடு தொடர்பில் பிழையான கருத்தையே கொள்வார்கள்.

நாடு இந்தளவு பாரிய நெருக்கடியில் இருக்கின்ற போதும் இனவாத, மதவாத சிந்தனை இன்னும் ஒழியவில்லை. இது தொடர்பில் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்ற செய்தி வெளிநாடுகளுக்கு செல்கின்றபோது நாட்டின் பொருளாதாரம் மேம்பட வாய்ப்புக்கள் ஏற்படப்போவதில்லை.

எனவே, இந்த நாடு முன்னேற வேண்டுமாக இருந்தால் நாட்டில் இனவாதம், மதவாதம் ஒழிக்கப்படவேண்டும். அனைத்துஇனமக்களும்இந்த நாட்டுக்கு சொந்தக்காரர்கள் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். அதேபோன்று பயங்கரவாதஎதிர்ப்புசட்டமூலத்தில் திருத்தங்களைசெய்யவேண்டும். அவ்வாறுஇல்லாமல்அவ்வாறே நிறைவேற்றிக்கொண்டால் நாடு இன்னுமொரு பாரிய அழிவுக்கே செல்வதற்கு வழிவகுக்கும். – என்றார்.

## நானுஓயாவில் உணவு ஒவ்வாமையால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

*நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நானுஓயாகிளாசோ பிரதேச பாடசாலையில் வழங்கப் பட்ட மதிய உணவை உட்கொண்டதால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக தரம் 3, 4, 5 இல் கல்வி பயிலும் மாணவர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.*

*குறித்த பாடசாலை தொடர்ச்சியாக உணவு வழங்கும் செயற்பாட்டினை முன்னெடுத்து வந்த நிலையில், நேற்று (வெள்ளிக்கிழமை) மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பகல் உணவை சாப்பிட்ட மாணவர்கள் மயக்கம், வயிற்று வலி, வயிற்றோட்டம், குமட்டல் மற்றும் வாந்தி போன்ற உடல் உபாதைகளால்பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு உணவருந்தியவர்களில் சுமார் 31 மாணவர்கள் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*மொத்தமாக, 105 மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 31 மாணவர்கள் வயிற்றுவலிக்கு உள்ளானதைத் தொடர்ந்து வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.*

*அதனையடுத்து, பாடசாலை மாணவர்கள் உட்கொண்ட உணவின் பகுதிகளையும் மாதிரிகளையும் பரிசோதனைக்காக நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*